888

ஜகன் மோகினி

ஜூலை 1954

JAGAN MOHINI

ESTD. 1923

அணா நான்கு

888
4 SEP 1954



பகவத்விஷய ரஸாநுபவம்

[திருவாய்மொழிப் பொருளமுதவெள்ளம்.]

இவ்விதழில் ஆரம்பம்



தமிழ்வேத மென்று போற்றப்படுகின்ற நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களுக்கு உலகில் யாவரும் எளிதாகப் பொருள் உணர்ந்துகொள்ளும் வண்ணம் ஸ்ரீ காஞ்சீ ப்ர. அ. ஸ்வாமி டணித்துள்ள வியாக்கியானமானது அவரது பெரும் புகழுக்கு ஒரு வெற்றித் தூணாக விளங்குகின்றது. நமது மோகினியில் அவர் தொடர்ந்து எழுதிவந்த அபூர்வ ராமாயணம் "அவரொருவரால்தான் இத்தகைய முறையில் எழுத முடியும்" என்ற நிகரற்ற புகழைப் பெற்றது. இவ்விதழ் முதல் பகவத் விஷயப் பெருங்கடலில்நின்றும் சில திவலைகளை ஸாரமாக எடுத்து, தமக்கே உரிய தனி நடையில், நம் ஸ்வாமி வெளியிடத் திருவுள்ளம் உவந்திருக்கிறார். தொடர்ந்து படித்துப் பேறு பெறுங்கள்.

நாவினால் நவிற்று இன்பம் எய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவுமற்று அறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித் திரிவனே! —மதுரகவி,

அருமறைகள் தமிழ் செய்தான் தாளேகொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டும்
தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே! —தேசிகர்,

பகவத்விஷய ரஸாநுபவம்

[திருவாய்மொழிப் பொருளமுதவெள்ளம்.]

✻

ஸ்ரீ காஞ்சி மஹா வித்வான் ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமி

✻

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் ஆழ்வார்களருளிச்செய்த திவ்வியப் பிரபந்தங்களே சிறந்த பிரமாணமாகக் கொள்ளப்பட்டு விளங்குகின்றன. வடமொழி நூற் கடல்களில் ஆழவிழிந்து அற்புதமான ஞானவிளக்கம்பெற்ற பேராசிரியர்களும் திவ்வியப் பிரபந்தங்களின் திவ்யமான பொருள்களை யநுபவித்தே காலங்கடத்தினர்கள். **"தோன்றுவுபகிடதப் பொருள் தோன்ற லுற்றூர் தமக்கும், சான்றுமிவை(இசைக்கவி- திருவாய்மொழி) என்றபோதும் மற்றென் !"** —(ஆழ்வார் நூற்றந்தாதி). 'நாலாயிரம்' என்று சிலரும், 'பிரபந்தம்' என்று சிலரும், 'திவ்யப் பிரபந்தம்' என்று சிலரும் வழங்கிவந்தாலும் இவற்றை அருளிச் சேயல் என்றே வைணவப் பெரியார்கள் வழங்குவர்கள். "ஆழ்வார்கள் வாழி! அருளிச் செயல் வாழி" என்ற ஆன்றோரருள் மொழி காண்க.

ஆழ்வார்களுள் நம்மாழ்வார் மிக்க சிறப்புப் பெற்றதுபோல திவ்யப் பிரபந்தங்களுள் நம்மாழ்வாரருளிச் செயல்களே அளவிறந்த சிறப்புப் பெற்றவை. அவரருளிய நான்கு திவ்யப் பிரபந்தங்களுள் திருவாய்மொழியென்னும் சரமப் பிரபந்தமே ஒப்புயர்வற்ற பெருமை வாய்ந்தது. திருவாய்மொழியென்னும் பெயர் நாலாயிரப் பிரபந்தங்களனைத்துக்கும் பொதுவான பெயரென்று பலர் மயங்கி யிருப்பதுண்டு; அஃது உண்மை யன்று. நம்மாழ்வார் அருளியதாய் "உயர்வற வுயர் நலம்" என்று தொடங்கி "பிறந்தாருயர்ந்தே" என்று தலைக்கட்டுமதான ஒரு திவ்வியப் பிரபந்தத்திற்கே திருவாய்மொழி யென்னுமிது சிறப்புப் பெயராகும். பூருவாசாரியர்கள் பலரும் இதற்கே அதிகமாக வியாக்கியானங்களைச் செய்து போந்தார்கள். அந்த வியாக்கியானங்களைக் கொண்டு திருவாய்மொழியை யநுபவிப்பதென்பது மானிடப் பிறப்பில் சிறந்ததொரு பாக்கியமாகும். உண்மையில் இப்பாக்கியம் ஒரு மூலையில் சில ஸுக்ருதிகளுக்கு விளைவதேயன்றி அனைவர்க்கு மெளிதன்று. ஏனைய சாஸ்திரங்களுக்கும் நூல்களுக்கும் அதிகாரிகள் எங்குமுள்ளார்கள். இதற்கு அதிகாரிகள் தேடிப்பிடிக்க வேண்டியவர்களேயாவர்.

இதற்கு பகவத் விஷயம் என்று உலகமெங்கும் பெயர் வழங்கி வருகிறது. இதற்கு இப்பெயரிட்டவர் யாரோ அறியோம். பகவத் விஷயமென்பதற்கு பகவானைப்பற்றியதென்று பொருள். ஸ்ரீராமாயணம், ஸ்ரீபாகவதம், மஹாபாரதம், ஹரிவம்சம், ஸ்ரீவிஷ்ணு புராணம் முதலிய பலவும் பகவானைப்பற்றியவையே; ஆயினும் அவற்றிற்கு பகவத் விஷயமென்கிற வழக்கு எங்கும் நிகழவில்லை. திருவாய்மொழி யநுபவத்தையே பகவத்விஷயாநுபவமென்றும்

183181

பகவத்விஷய காலக்ஷேபமென்றும் வழங்கி வருவது கொண்டே இதன் ஒப்புயர்வற்ற பெருமையை யுணரலாம்.

ஆங்காங்கு விஷ்ணுவாலயங்களில் பகவானுடைய திருவீதிப் புறப்பாடுகளில் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியார் திவ்யப்பிரபந்தங்களை ஓதிவருகிறார்களென்பதை அனைவருமறிவர். ஆனால், மற்றைத் திவ்வியப் பிரபந்தங்களை வீதிகளில் ஓதுவர்களேயன்றித் திருவாய்மொழியை ஓதார்கள். இதை வீதிகளில் நடந்துகொண்டு சொல்லலாகாதென்றும் பெருமாள் ஆஸ்தானங்கொண்டு அமர்ந்திருக்கும் போதே ஸ்வாமிகள் வீற்றிருந்து சேவிக்கவேணுமென்றும் ஸ்ரீமந் நாதமுனிகளால் இடப்பட்ட கட்டளை அந்நாள் தொடங்கி இந்நாள் வரை எங்கும் ஏகரீதியாகப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இதனாலும் இதன் சிறப்பு அறியப்பெறலாகும்.

தமிழ் மொழியில் அந்வயமற்ற பிறநாட்டினரும் இதன் பொருட்சுவையைக் கேட்டுப் பரவசர்களாகி மூலத்தையாவது கற்றுவைப்போமென்று துணிந்து "எங்ஙனே சொல்லிலுமின்பம் பயக்குமே" என்று திருவாய் மொழியிலேயே ஆழ்வாரருளிச் செய்திருக்கிறபடி ஒருவாறு சொல்லி இன்பம் நுகர்ந்து வருகின்றனரென்பதை எண்டிசையிலும் கண்டு வருகிறோம். திருவாய்மொழிப் பாசுரங்களைக் கண்டபாடஞ் செய்து வியாக்கியானங்களைக் கொண்டு பொருளுணர்ந்து இன்பம் நுகர்வதென்பது அரிய பெரியகாரியமாகும். அவ்வளவு பரிச்ரமத்தைச் சகிக்கமாட்டாதவர்களும்பகவத்விஷய ரஸாநுபவஞ் செய்து இன்புறவேணுமென்கிற பேரவாவினால் "பகவத்விஷய ரஸாநுபவம்" என மகுடமிட்டுஇஃது எழுதப்புகுகின்றேன். கதைகளையும் நாவல்களையும் ருசியுடன் வாசிப்பதுபோலவே இதனையும் வாசித்து வேதாந்த விழுப்பொருளின்மேலிருந்த விளக்கைக் கண்டு களிக்கப் பெறுவார்களென்பது எமது நம்பிக்கை.

முந்துற முன்னம் நம்மாழ்வாரது பெருமையைப்பற்றிச் சிறிது பேசுவோம். "பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து" என்ற முதியார் மொழியின்படி முத்து வளத்தை மிகுதியாகவுடையதும்,செந்தமிழ் நாடென்று சிறப்புற்றதும், "ஈரொன்பதாம்பாண்டி" என்கிறபடியே பதினெட்டுத் திருப்பதிகளையுடையதுமான பாண்டிய நாட்டிலே, கங்கை யமுனை முதலிய புண்ணியநதிகள் பலவற்றிலும் விஞ்சிய வீறுபெற்ற தாமிரபர்ணி யென்னும் பொருநையாற்றின் கரையிலே ஆழ்வார் திருநகரியென வழங்கப்பெற்றுவரும் திருக்குருகூரில் வேளாள வருணத்தில் வம்சபரம்பரையாகத் திருமாலடிக்கே தொண்டு பூண்டொழுகுஞ் சிறந்த குலத்திலே காரியார்க்கும் உடையநங்கைக்கும் திருக்குமாரராக வைகாசி விசாகத்தில் திருவவதரித்தவர் இவ்வாழ்வார். இவர்க்கு, சடகோபன், பராங்குசன், வகுளாபரணன், மகிழ்மாலை மார்பினன், காரிமாறன் முதலான பல திருநாமங்கள் வழங்கும். 'ப்ரபந்நஜந கூடஸ்தர்' என்பது சிறப்புத் திருநாமம்.

இவரது திருவவதாரத்தைப்பற்றிப் பலர் பலவாறு சங்கிப்பர்கள். ஆசார்யஹ்ருதயம் என்னும் சிறந்த நூலிலுள்ள வொரு சூர்ணிகையை இங்கெடுத்துக் காட்டுவோம்;—

A122

“அத்ரி ஜமதக்நி பங்க்திரத வஸுநந்தஸூநுவான வனுடைய யுகவர்ணக்ரமாவதாரமோ? வ்யாஸாதிவத் ஆவேசமோ? மூதுவர் கரைகண்டோர் சீரியரிலே ஒருவரோ! முன்னைம் நோற்ற அனந்தன்மேற் புண்ணியங்கள் பலித்தவரோ! என்று சங்கிப்பர்கள்” என்பதாமது.

இதன் கருத்தாவது—க்ருதயுகத்தில் அத்ரியும் ஜமதக்நியுமாகிற ப்ராஹ்மணோத்தமர்களுக்குப் பிள்ளையாய்க் கொண்டு தத்தாத்ரேயனும் பரசுராமனுமாய், திரேதாயுகத்திலே க்ஷத்ரியனான தசரத சக்கரவர்த்திக்குப் பிள்ளையாய், த்வாபரயுகத்தில், ராஜ்ய ப்ராப்தியில்லாத யதுகுலத்திற் பிறந்து க்ஷத்ரியரில் தண்ணியரும் வைச்ய ப்ராயருமான வஸுதேவர்க்கும், கோரக்ஷணத்தாலே ஸாக்ஷாத் வைச்யரான ஸ்ரீ நந்தகோபர்க்கும் பிள்ளையாய் ஆகவிப்படி இருதம் முதலிய யுகங்களினடைவே ப்ராஹ்மணாதி வர்ணங்களில் முறையே அவதரித்து வந்த ஸர்வேச்வரன் நான்காவதான கலியுகத்திலே நான்காவது வருணத்திலே ஆழ்வாராக வந்து அவதரித்தபடியோ! என்று சிலர் எண்ணினார்கள்.

மற்றுஞ் சிலரோ வென்னில், வேதங்களைப் பகுத்தல் முதலிய காரியங்களுக்காக வியாஸர் முதலியமஹர்ஷிகள் பக்கலில் பகவான் ஆவேசித்தது போலே தமிழ் வேதத்தை வெளியிடுதற்காக இவர் பக்கலில் ஆவேசித்தபடியோ! என்று எண்ணினார்கள்.

இன்னமுஞ்சிலர், இவ்விபூதியைத் திருத்துகைக்காக எம்பெருமானது கட்டளையினால் நித்யஸூரிகளி லொருவர் வந்தவதரித்தபடியோ வென்று கருதினார்கள்.

வேறு சிலர், முக்தரிலே ஒருவர் வந்தவதரித்தபடியோ? அன்றியே சீவேதத்வீபவாஸிகளிலொருவர்வந்தவதரித்தபடியோ! அல்லது கீழ்ச் சொன்னவர்களி லொருவருமன்றியே ஸம்ஸாரிகள் தம்மிலே பல்லாயிரம் பிறவிகளிலீட்டிய நல்வினையின்பயனாக இங்ஙனம் திருந்தினாரொருவரோ! என்று சங்கித்தார்கள்.

அன்றியே நிர்ஹேதுக கடாக்ஷ விசேஷத்தாலே நித்ய ஸம்ஸாரியை நித்யஸூரியோடொக்கச் செய்யவல்ல எம்பெருமானாகிற ஒரு புண்யவிசேஷம் முழுநோக்காகப் பலித்து இங்ஙனம் திருந்தப் பிறந்தாரொருவரோ! என்றும் சங்கித்தார்கள்—என்றபடி.

ஒருவாறு நிர்ணயித்துக்கூறமுடியாமல் இங்ஙனம் பலவாறு சங்கிக்கும்படியான பெருமையாயிற்று இவரது.

‘சேமங் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ—தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
உளவோ பெருமா னுனக்கு.’

என்பது முதலான பலபாசுரங்கட் கிணங்க, ஆழ்வாரை எம்பெருமான்றனது அவதாரமாகக் கொள்ளுதலும் இவரது மிக்க பெருமைக்குப் பொருந்தியதே யாகும்.

பகவானுக்குப் பலவாற்றாலும் அடிமை செய்வதையே உறு தொழிலாகக்கொண்ட திருவனந்தாழ்வான் [ஆதிசேஷன்] பகவானது அவதாரங்கள் தோறும் உடன்வந்து அடிமை செய்து

போல நம்மாழ்வாராகிற இப்பெருமானுடைய அவதாரத்திலும் அவன் ஒரு பெரிய புளியமரமாக முன்னமேவந்துதோன்றியிருந்து ஆழ்வாரான இத்தெய்வக் குழவிமீது வெயில் மழை முதலியன படாதிருக்குமாறு காத்துவந்தனன்.

இத் தெய்வ சிசு பிறந்தபொழுதேதொடங்கி அழுதல்பாலுண்ணுதல் முதலிய உலக வியல்பு ஒன்றுமின்றியும் வாட்டமில்லாது பரிபூர்த்தியோடிருக்குமதிசயத்தைக் கண்டு தாய் தந்தையர் எம்பெருமான் பக்கலிலே பாரத்தை வைத்திட்டுத் தாம் சிறிதும் கவலையுறாமல் விலகி நின்றனர். இத் தெய்வக் குழவி திருக்குருகூர்ப் பெருமானுன பொலிந்துநின்றபிரானது திருமுன்பே திருப்புளி மரத்தடியிலே வளர்ந்து வாரா நின்றது.

கருக்குழியி லிருக்கும்பொழுது ஞானமுடையனவாயிருக்கிற குழந்தைகளை, பிறந்தவுடனே அஜ்ஞானத்துக்கு உள்ளாக்கி அழுதல் அரற்றுதல் முதலியன செய்யும்படிப் பண்ணிவிடுந் தன்மையதான சடமென்னும் வாயு இவரையும் தொடுதற்கு வர, அப்பொழுது இவர் அதனை உங்காரத்தால் ஒறுத்து ஒட்டியொழித்ததனுல் இவர்க்குச் சடகோபர் என்று திருநாமமாயிற்று. உலகநடைக்கு மாறாயிருந்ததனல் மாறனென்றுந் திருநாமமாயிற்று. "நஞ்சடகோபனைப் பாடினையோவென நம்பெருமாள் விஞ்சிய வாதரத்தாற் கேட்ப" என்று பின்புள்ளாருங் கொண்டாடும்படி இவர் திருவரங்கத்தரவணையில் துயிலும் நம்பெருமாளால் 'நம்ஆழ்வார்' என்று அபிமானித்து விசேஷ கடாக்ஷம் செய்யப்பெற்று மற்றை யாழ்வார்களனைவரினும் உயர்வுபெற்றதனுல் 'நம்மாழ்வார் என்றே வழங்கப்பட்டு வருகின்றார்.

இவ்வாழ்வார் பதினறு பிராயமளவும் கண் விழியாமல் மௌனத்தோடிருக்க, அப்பொழுது பரமபதநாதனது நியமனத்தினல் சேனைமுதலியாரென்கிற விஷ்வக்ஸேநர் ஏகாந்தமாக வெழுந்தருளி இவர்க்குத் திருவாழி திருச்சங்கிலச்சினை செய்து ஸகலமந்த்ரப் பொருள்களையும் உபதேசித்தருளினர். அதனைத் தமது முதற்பிரபந்தமாகிய திருவிருத்தத்தில் "பெருங்கேழலார் தம் பெருங்கண்மலர்ப் புண்டரீகம், நம்மேலொருங்கே பிறழவைத்தாரிவ்வ காலம்" என்ற பாசுரத்தினல் ஒருவாறு ஸூசிப்பித்திருக்கின்றாரென்று ஸம்பிரதாயம் வல்ல பெரியார் கூறுவர்.

பதினறு கலைகளும் நிறைந்த சந்திரன்போலப் பதினறு பருவம் நிரம்பி உறங்காப்புளிநிழலிலே பத்மாஸனங்கொண்டு வீற்றிருந்து பரதத்துவத்தைத் தியானஞ் செய்து ஞானமுத்திரை கைக்கொண்டிருக்கு மிவ்வாழ்வாருடைய திருமேனிச் சோதியானது, வடநாட்டுத் திருப்பதியாத்திரை சென்றிருந்த மதுரகவியாழ்வாரை நெடுந் தூரத்தினின்றுமிழுக்க, அவர் விரைந்துவந்து இவரையணுகி இவரது ஞானபக்தி விரக்திகளை நன்கறிந்து மகிழ்ந்து இவர்க்கு அத்தாணிச் சேவகராக அமைந்தனர். அவரே ஆழ்வார்க்கு அந்தரங்கமெனும் நெஞ்சின் ஸ்தானத்திலேயிருந்தனர். ஆழ்வார் தமது மூன்றாவது பிரபந்தமாகிய பெரிய திருவந்தாதியில் "யானுமென்னெஞ்சு மிசைந்தொழிந்தோம்" என்றவிடத்து "என்னெஞ்சு" என்ற சொல்லால் அந்த மதுரகவிகளை குறிப்பிடப் பெற்றாரென்பது ஸம்பிரதாயம்.

"நம்சட கோபனைப் பாடினை யோவென்று நம்பெருமாள்
விஞ்சிய வாதரத் தாற்கேட்பக் கம்பன் விரைந்துரைத்த
செஞ்சொல்அந் தாதி கலித்துறை நூறும் தெரியும்வண்ணம்
நெஞ்சு அடி யேற்கு அருள் வேதம் தமிழ்செய்த நின்மலனே!"

— தனியன்: ஆழ்வார் நூற்றந்தாதி.

பாலும் சர்க்கரையும் கலந்தாற்போல் இவ்விருவரும் ஒன்று சேரவே பகவதநுபவம் மிகமிக முற்றிற்று. நூற்றெட்டுத் திருப்பதி யெம்பெருமான்களும் அங்கு எழுந்தருளி ஆழ்வார்க்குக் காட்சி கொடுக்க, அவர்களைச் சேவித்து, அவர்களது திவ்ய குணங்களை யநுபவித்து, அவ்வநுபவத்தினலுண்டான ப்ரீதி உள்ளடங்காமல் புறவெள்ளமிட்டுப் பெருகத் தொடங்கவே அதுவே திவ்வியப்பிரபந்தங்களாக உருக்கொண்டதாயிற்று.

வடமொழியில் ருக்வேதம், யஜுர்வேதம், அதர்வணவேதம், ஸாமவேதம் என நான்கு வேதங்களுண்டு; அவையே நம்மாழ்வா

ருடைய திருமுகத்தினின்று திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழியென நான்கு திவ்ய ப்ரபந்தங்களாக அடைவே தோன்றின.

வேதங்களுட் சிறந்ததும் பகவானது ஸ்வரூபமாகவேயுள்ளதுமான ஸாமவேதத்தின் தத்துவப்பொருளைச் சரமப் பிரபந்தமான திருவாய்மொழியினால் வெளியிட்டருளினாரென்பது திருவாய்மொழித் தனியன்களுள் முதலதான "பக்தாம்ருதம் விச்வஜநாநுமோதநம்" என்கிற சுலோகத்தில் "ஸஹஸ்ரசாகோபநிஷத்ஸமாகமம்" என்பதனால் வெளியாகும்.

நாம் கற்றுணரத் தோன்றிய சாஸ்த்ரங்கள் எவ்வளவு விபுலமாக இருந்தாலும் அவற்றினின்று ஐந்து பொருள்களே நாம் அறிய வேண்டியவை யென்று மேலையார் முடிவு செய்தனர். அந்த ஐந்து பொருள்களாவன—பரபிரம்மஸ்வரூபமும் ஜீவாத்மாவினது தன்மையும் பரமாத்துமாவை அடையும் உபாயமும் அங்ஙனம் அடைதலின் பயனும் அடைதற்கு உள்ள பிரதிபந்தகமும்—என்பனவாம். இவையே ஸகல வேதசாஸ்திரங்களிலும் ஸாரமாகச் சொல்லப்பட்டவையாம். திருவாய்மொழியிலும் இவையே சில பாசுரங்களிற் சுருக்கமாகவும் பலபாசுரங்களில் விரிவாகவும் தெரிவிக்கப்படுகின்றனவென்பது,

"மிக்க இறைநிலையும் மெய்யா முயிர்நிலையும்,
தக்க நெறியும் தடையாகித்—தொக்கியலும்,
ஊழ்வினையும் வாழ்வினையு மோதுங் குருகையர்கோன்,
யாழினிசை வேதத் தியல்."

என்ற திருவாய்மொழித் தனியனாலும் விளக்கப்பட்டுள்ளது.

இவ்வாழ்வார் எம்பெருமானது திருவடிகளுக்கு மிகவும் அந்தரங்கராக இருந்ததனால் பெருமாளது பாதுகை'ஸ்ரீசடகோபன் என்று இவரது திருநாமத்தையிட்டு வழங்கப்பட்டுவருகின்றது. இது சில க்ஷேத்திரங்களில் மாத்திரமன்றிக்கே விஷ்ணுவாலயமென்று பேர்பெற்ற ஸகலஸ்தலங்களிலும் ஏகரீதியாகக் காண்கின்றமையாலும், நம்மாழ்வாருடைய விக்ரஹாராதனமில்லாத விஷ்ணுகோவில் காணக்கிடைக்காததாலும் இவ்வாழ்வாருடைய பெருமை நீண்டகாலமாகவே உலகமெலாம் பரவியுள்ளதென்பது அறியற்பாலது. ஆக, இவ்வளவும் நூன்முகமாக உரைத்ததென்று கொள்க.

நூறுபதிகங்கள் கொண்ட திருவாய்மொழியாயிரத்தை யநுபவிப்பது பலவகையாக அமையும். ஒவ்வொரு சொல்லையுமெடுத்துக்கொண்டு அநுபவிக்கலாம்; ஒவ்வோரடியாக அநுபவிக்கலாம்; ஒவ்வொரு செய்யுளாக அநுபவிக்கலாம். ஆனால் அவ்வநுபவங்கள் நீண்டகாலம் இடையறாது செல்ல வேண்டியவையாகும். நாம் மிகவிரிவாக எழுதி வெளியிட்டுள்ள திவ்யார்த்த தீபிகையுரையைக் கொண்டும், பேரின்பமே வடிவெடுத்த பூர்வாசார்ய வியாக்கியானங்களைக்கொண்டும் அத்தகைய அநுபவங்களை நிகழ்த்தலாம், ஒவ்வொரு பதிகத்தினுடையவும் பிரமேயத்தை விளக்கும் முகத்தால் இப்போது நாம் செய்யப்புகுமநுபவம் ரஸிகர்களுக்கு மிகவும் பயன்படுமென நினைக்கிறோம்.

ஆசார்ய சிகாமணியான மணவாளமாமுனிகள் அருளிய திவ்விய நூல்களிலே திருவாய்மொழி நூற்றந்தாதியென்பதொன்று. இதற்கு நிகரான நூல் இதுகாறும் இவ்வுலகின்கண் தோன்றிற்றில்லை. ஒவ்வொரு பதிகத்தினுடையவும் ஸாரமான பொருளை ஒவ்வொரு வெண்பாவினால் வெளியிட்டது அது. அதையே மூலமாகக் கொண்டு இதனையெழுதப்புகுதும்.

முதற்பதிகம்

திருவாய்மொழியின் முதற்பதிகம் “உயர்வற வுயர்நல முடையவன்’ என்று தொடங்குவது. இஃது எம்பெருமானுடைய பரத்துவத்தை முதலிக்கத் தோன்றியது.

‘பகவான் பராத்பரன்’ என்பதை நாம் எதுகொண்டு தெரிந்துகொள்வது? கட்கூடாகக் கண்டு தெரிந்துகொள்ளக் கூடிய விஷயமன்று; அநுமானத்தாலுமறிந்து கொள்வதொன்றன்று. கேவலம் சாஸ்த்ரங்களினாலேயே தெரிந்துகொள்ளத் தக்கதாகிறது. இந்திரியங்களுக்கு எட்டாத விஷயங்களில் சாஸ்திரமேபிரமாணமென்பது ஆஸ்திகர்களான வைதிகர்கள் அறுதியிட்ட விஷயம். இதனையே ஆழ்வாரும் இப்பதிகத்தில் (7) *சுடர்மிகு சுருதியுள் இவையுண்ட சுரன்—உளன்* என்பதனால் தெரிவித்தருளினர். அதாவது தேசு பொலிந்த வேதங்களினால் அறியப்படுபவன் எம்பெருமான என்றபடி. அங்ஙனம் வேதங்களினால் அறியக் கூடியதான பகவானது பரத்துவம் இப்பதிகத்தில் பல விசேஷணங்களையிட்டு நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. “உயர்வற வுயர் நல முடையவன்” என்பது திருவாய்மொழியின் தொடக்கம். இதற்கு மேல் உயர்த்தியுள்ளதென்று சொல்லமுடியாதபடி நிரவதிகமாக உயர்ந்த நற்குணங்களையுடையவன்—என்பது இதன் பொருள்.

பகவானை நிர்க்குண ப்ரம்மம் என்று கொள்வர் ஒரு சாரார்; ஸகுண ப்ரம்மமென்பர் மற்றொரு சாரார். உபநிஷத்துக்களில் சில விடங்களில் பரப்ரம்மத்தை நிர்க்குணமென்றும் மற்றும் பலவிடங்களில் அனந்த கல்யாணகுணங்களிருப்பதாகவும் ஓதியிருக்கிறது. இரண்டையும் ஸமங்வயப் படுத்தவேண்டுமல்லவா? பரம ப்ராமாணிகமான வேதமானது தவறாகவோ ஒன்றோடொன்று முரண்பட்டதாகவோ பேசமாட்டாதன்றோ. முரண்படப் பேசியிருப்பது போல் தோன்றினால் விரோத லேசமுமில்லாதபடி ஸமரஸப்படுத்துவதே சாஸ்த்ரங்கள் வல்லார்களின் பணி. அப்படி ஸமரஸப்படுத்துமிடத்தில் நிர்க்குணமென்கிறவேதங்கள் தீயகுணமொன்றுமில்லாமையைச் சொன்னதாக முடியும். இதுவே பரமவைதிகர்களின் கொள்கை. இதை ஆழ்வாரருளிச் செயல் கொண்டறிந்தே ஸ்ரீராமாநுஜர் தமது ஸ்ரீபாஷ்யம் முதலான நூல்களில் ஸகுண ப்ரம்மஸ்தாபனம் செய்துவைத்தார். பகவானை அடியோடு ஒப்புக்கொள்ளாதவர்களைக் காட்டிலும் அவனை யொப்புக்கொள்பவர்கள் மேம்பட்டவர்களெனினும், ஒப்புக்கொள்ளப்படுகிற பகவானுக்கு குணமில்லை, விக்ரஹமில்லை, விபூதியில்லை யென்பவர்கள் பகவானை ஒப்புக்கொள்ளாமலிருப்பதே நன்றென்று ஓரிடத்தில் வேதாந்த தேசிகர் எழுதியுள்ளார். குணமுடைமை, விபூதியுடைமை, விக்ரஹமுடைமை ஆகிய மூன்றையும் ஆழ்வார் முதற்பாட்டிலேயே திடப்படுத்துகிறார்.

(தொடரும்.)

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

தர்மாமீடர்!

கவலை தோய்ந்த முகத்தோடு கமலம் குழந்தையின் உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். உடம்பு நெருப்பாய்க் கொதித்தது. ஐயோ டாக்டர் வந்து பார்த்ததற்கு இப்போது ஜுரம் அதிகமாய் இருக்கும்போல் தோன்றுகிறதே! வீட்டில் தர்மாமீடர்கூட இல்லையே... என்ன செய்வது? என்று யோசித்தாள். சட்டென்று பக்கத்து வீட்டு அலமேலுவிடம் இருப்பது ஞாபகத்திற்கு வரவே ஓடிப்போய் அவளைச் சற்று தர்மாமீடரைத் தரும்படிக் கேட்டாள். அலமு, உடனே தர்மாமீடரை எடுத்துக் கமலத்தினிடம் தந்து, ''கமலம்! இது சரியான பழைய தர்மாமீடர்; பத்திரமாய்த் தந்துவிடு. இதை வைத்துப்பார்க்கும் வேளை உன் பிள்ளை சீக்கிரம் குணமாய் விடுவான்'' என்று சொன்னாள். கமலம் சந்தோஷத்தோடு தர்மாமீடரை வாங்கிக்கொண்டு வந்தாள். வைத்துப் பார்த்தால் சரியாய் 102க்குமேல் இருந்தது. ஆனால் டாக்டர் ஏற்கெனவே மத்யானம் ஜுரம் கொஞ்சம் ஏறும் என்று சொல்லியிருந்ததால் அதிகம் பயப்படாமல் குழந்தையிடமே உட்கார்ந்துகொண்டு இருந்தாள்.

மறுநாள் மத்யானம் டெம்பரேசர் பார்க்க தர்மாமீடரை எடுத்தாள். க்ரஹசார வேளை!...எப்படியோ தர்மாமீடர் கைதவறிக் கீழேவிழுந்துவிட்டது. எடுத்துப் பார்த்தால் நூறு சுக்கலாய் இருந்தது! என்ன செய்வது? வேறு யாராவது போட்டு உடைத்து இருந்தால் ஆத்திரம்தீர ரெண்டு வசவாவது வையலாம். தானே உடைத்ததால் ஒன்றும் செய்ய மாட்டாது சாயங்காலம் தன் கணவர் வந்தால் வேறு புதுசு வாங்கி வந்து பதிலுக்கு அலமேலுவுக்குத் தந்துவிடலாம் என்று பேசாது இருந்தாள். எதிர்பார்க்காதவிதம் அலமேலு வருவதைப் பார்த்த கமலத்திற்குத் தூக்கிவாரிப் போட்டது.

தர்மாமீடர் கேட்கத்தான் வந்துவிட்டாளோ என்னவோ என்று தோன்றியது. எப்படியுந்தான் புதியதாய் வாங்கித் தரப் போகிறோம். இருந்தாலும் அலமேலுவுக்கு...பெரியவாள்காலைய வஸ்து...ஆயிவந்த பழம் வஸ்துக்கள் என்றால் ஒருதனி மதிப்பும் நம்பிக்கையும் உண்டு. அதே போல் இந்தத் தர்மாமீடரும் அவள் ரொம்ப நாளாய் வைத்துக்கொண்டு இருக்கிற வஸ்து. அதை பத்திரம் என்று சொல்லி வேறு கொடுத்து இருக்காள். ஆதலால் அவளுக்கு உடைந்துவிட்டது என்றால் கோபம் வருமோ என்னவோ? புதியது வாங்கித் தந்தால் என்ன சொல்வாளோ?...என்று பயம் வாட்டியது. கமலம் புதிய தர்மாமீடர் வாங்கி அவள் பழைய கவரில் வைத்துத் தெரியாமல் கொடுத்துவிடலாம் என்று

நினைத்துக்கொண்டு இருந்தாள். ஒருவேளை இப்போதே கேட்டால் என்ன செய்வது? என்ற குழப்பத்தில் வந்தவளை வரவேற்கவும் மறந்துவிட்டாள். கமலம் பிள்ளையின் ஜுரத்தால் அதிகம் கவலைப்படுவதாய் நினைத்து, ''கமலம்! எப்படி இருக்கிறது உடம்பு குழந்தைக்கு?'' என்று தானே விசாரித்தாள் அலமேலு. அப்போதுதான் உணர்வுபெற்ற கமலம் ''வா! ...வா! அலமேலு, வா! என்ன உடம்போ, இன்றுதான் ஜுரம் கொஞ்சம் குறைந்து இருக்கிறது. என்ன பசங்களோ! கவலைப் படவே என்னால் முடியவில்லை'' என்றாள்.

அலமேலு:—அதை ஏன் கேட்கிறாய்? காலையில் நன்றாய்ப் பள்ளிக்கூடம் போனபிள்ளை இப்போது ஜுரத்தோடு வந்து நிற்கிறது. தர்மாமீடருக்குத்தான் ஓடிவந்தேன். என் தர்மாமீடர் நல்ல ராசியானதும்மா!......அதை வைத்துப் பார்க்கும் வேளை சிக்கிரமே ஜுரம் குறைந்துவிடும். கொஞ்சம் தாயா, கமலம்!

கமலத்திற்கு தலையே சுழன்றது! தான் நினைத்தது போலவே ஆய்விட்டதே, என்ன செய்வது! என்று தெரியாது யோசித்தாள். சரி!...இதில் பொய் என்ன என்று, ''மன்னித்துக் கொள் அலமேலு. இன்று நான் கைதவறி உன் தர்மாமீடரைப் போட்டு உடைத்துவிட்டேன். சாயங்காலம் அவர் வந்ததும் உனக்கு உடனே வாங்கிவந்து தந்துவிடச் சொல்கிறேன். ரொம்ப மன்னிப்புக் கேட்கிறேன்'' என்றாள். அலமேலுவுக்கு முகம் கடுக்காயாய்ச் சுருங்கிவிட்டது. இருந்தாலும் காட்டிக் கொள்ளாது, ''சரி! கைதவறிவிட்டால் என்ன செய்வது? ரொம்பநாளைய வஸ்து ஆச்சே! நல்ல ராசியானது ஆச்சே! என்றுதான் கவலை, சரி! நான் வருகிறேன்'' என்று வீட்டுக்குப் போய்விட்டாள்.

கமலம் தன் கணவர் வந்ததும் காப்பி டிபன் கொடுத்து விட்டு, தர்மாமீடர் விஷயத்தைச் சொல்லி, புதுசு வாங்கிவரச் சொன்னாள். உடனே அவரும் சென்று வாங்கி வந்தார்...இதை யாவது உடைக்காது உருப்படியாய்ச் சேர்ப்பிக்கவேண்டுமே... என்று கமலம் பிரித்துக்கூடப் பார்க்காது எடுத்துக்கொண்டு போய் அலமேலுவிடம் கொடுத்துவிட்டு வீட்டுக்கு வந்தாள்.

அலமேலுவுக்குத் தன்னிடம் ரொம்ப நாளாய் இருந்த தர்மாமீடர் உடைந்துவிட்டதே என்ற குறை இருந்தாலும் அதுமட்டும் உடனே பதிலுக்கு வாங்கித் தந்துவிட்டதற்குச் சந்தோஷப்பட்டுக்கொண்டு பிள்ளைக்கு வைத்துப்பார்த்தாள். சரியாய் 104 டிகிரி காண்பித்தது! அலமூவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. மேலே தொட்டுப்பார்த்தால் அவ்வளவு அதிக மாய்ச்சுடவில்லை. ஒருவேளை தர்மாமீடரில் எதாவது கோளாறு இருக்குமோ என்று சந்தேகம் தோன்றியது. தானேவைத்துப்

பார்த்துக்கொண்டாள். அவளுக்கு 98 டிகிரி காண்பித்தது. அதிலிருந்து தர்மாமீடர் சரிஎன்று தெரிந்துகொண்டு உடனே டாக்டருக்குச் சொல்லி அனுப்பி நல்ல மருந்து வாங்கித் தந்தாள். ஒருவாரம் சென்றது. ஜுரம் குறைந்தபாடு இல்லே. தர்மாமீடர் 102-க்குக்கீழ் காண்பிக்கவே மறுத்தது. அலமேலு வுக்கோ தர்மாமீடரை எடுக்கும்போதே எரிச்சலாய் வரும். ''சனியன்! ஓயாது ஒழியாது இதற்கு வேலே சரியாய் இருக்கிறது. பழைய தர்மாமீடர் ஒருதரம் வைத்தால் மறுதரம் வைக்கவேண்டாம். ஜுரம் உடனே குறைந்துவிடும். பீடை! வாங்கிப்போன பண்டத்தை ஜாக்ரதையாய் வைக்காது உடைத்து எறிந்தாள்!'' என்று திட்டிக்கொண்டே குழந்தைக்கு வைத்துப்பார்த்தாள். அவளது எரிச்சலுக்கு ஏற்றாற்போல் ஜுரம் இன்னும் அதிகமாய் 104-க்குமேல் காண்பித்தது. தர்மாமீடரை உடைத்துப் போட்டுவிடலாமா என்று ஆத்திரமாய்ப் பற்றிக்கொண்டது. கமலத்தை ஆத்திரம்தீர வைதாள். உடனே டாக்டருக்குச் சொல்லி அனுப்பிவிட்டுக் குட்டியிட்ட பூனைபோல் அலைந்துகொண்டு இருந்தாள். எதிர்வீட்டு சுந்தரம் ஓடிவந்து, ''மாமி! எங்க சின்ன தம்பிக்கு ஜுரமாய் இருக்கிறதாம். உங்களிடம் தர்மாமீடர் இருந்தால் வாங்கிக் கொண்டுவரச் சொன்னாள்'' என்றான்.

தர்மாமீடரைப் பார்த்தாலே எரியும் அலமு ''சனியன்! இது வீட்டைவிட்டுத் தொலைந்தாலே ஒருவேளை குழந்தைக்கு ஜுரம் குறையுமோ...என்னமோ! ஒழியட்டும் சனியன்!...'' என்று மறுபேச்சு இல்லாது சுந்தரத்தினிடம் கொடுத்தாள்.

சுந்தரம்:—மாமி! இப்பவே பத்திரமா கொண்டு தந்து விடறேன்!—என்றான்.

''வேண்டாம்! வேண்டாம்! இவனுக்கு உடம்பு குணம் தான். உன் தம்பிக்கு ஜுரம் குறைந்ததும் கொண்டுதா! அவசரமில்லே...'' என்றாள். தனக்கு அவசியமாய் வேண்டியிருப்பதுகூட அவளுக்குத் தோன்றவில்லே. அது வீட்டை விட்டுப் போனாலே தேவலேபோல் இருந்தது. சுந்தரம் போனதுமே டாக்டர் வந்தார். அவர் தர்மாமீடரில் 101 தான் காண்பித்தது. அலமுவுக்கு அப்போதுதான் கொஞ்சம் உயிர் வந்தது. ''அப்பா! அது வீட்டைவிட்டுப் போனதே தேவலே. குழந்தைக்கு ஜுரம் குறைந்து இருக்கு. அது திரும்பிவந்தால் கட்டாயம் உடைத்துத்தான் விடப்போகிறேன்...என்று நினைத்துக் கொண்டாள். ஒருவித விசேஷமும் இன்றி இரண்டுநாள் சென்றது. குழந்தைக்கும் ஜுரம் நன்றாய்க் குறைந்துவந்தது.

சாயங்காலம் அலமு சற்று நிம்மதியாய்க் குழந்தையோடு பேசிக்கொண்டு இருந்தாள். அவள் டாக்டரின் மனைவி சுதா

குழந்தையைப் பார்க்க வந்தாள். சுதாவும், அலமுவும் குழந்தை உடம்பைப்பற்றிப் பேசிக்கொண்டு இருந்தார்கள். சுந்தரம் அலமுவிடம் வந்து, “மாமி இந்தாருங்கள் உங்கள் தர்மாமீடர்! பத்திரம்! இதுவந்த வேளை அதற்கு 24 மணி நேரமும் வேலை சரியாய் இருந்தது. ஒரு தம்பிக்கு ஜுரம் பார்க்க வாங்கிப்போய், வீடுபூராவும் எல்லோரும் ஜுரமாய்க் கிடக்கிறார்கள். எங்க அம்மாவுக்குத் தர்மாமீடர் வைத்துப் பார்த்துப் பார்த்து அலுத்தும்விட்டது. அது கையில் இருந்தால்தானே வீண்தொந்தரவு. இதை அனுப்பிவிட்டால் ஒரு வேளை எல்லோருக்கும் ஜுரம் குறைந்துவிடுமோ என்று தோன்றிவிட்டதாம். கொடுத்துவிடச் சொன்னாள். ஜாக்கிரதை, மாமீ!” என்று கொடுத்துவிட்டு ஓட்டம் பிடித்தான். அலமுவுக்குத் தர்மாமீடரைக் கையில் வாங்கும்போதே ஒரு புறம் வெறுப்பும், ஒருபுறம் குழந்தைக்கு ஜுரம் திரும்பி வந்துவிடுமோ என்று பயமும் உண்டாகியது. இவள் முகம் மாறியதைக் கவனித்த சுதா, “என்ன அலமு! ஏன் உன் முகம் ஒருமாதிரி ஆய்விட்டது? தர்மாமீடர் உடைந்து இருக்கா என்ன?” என்றாள்.

அலமு:—உடைந்துவிட்டாலே தேவலை, சுதா! நான் எவ்வளவோ நாளாய் ஒரு தர்மாமீடர் பத்திரமாய் வைத்து இருந்தேன்; நல்ல ராசியானது; ஜுரம் வந்தால் ஒருதடவை வைத்துப்பார்த்தால் போதும்; மறுதடவை வைக்கவேண்டாம். ஜுரம் உடனே குறைந்துவிடும். அதை என் சிநேகிதி வாங்கிக் கொண்டுபோய் உடைத்துவிட்டு பதிலுக்கு இந்த அழகான தர்மாமீடரை வாங்கித் தந்தாள். இந்தப் பீடை வந்தவேளை என் குழந்தைக்கு ஜுரம் ஏறுகிறதே தவிர குறைந்தபாடு காணோம். இந்தப் பையன் இரண்டு மூன்று நாள் முந்தி வீட்டில் தம்பிக்கு ஜுரம் என்று வாங்கிப்போனான். அவன் சொல்லிக்கொடுத்த சங்கதியைத்தான் நீ கேட்டாயே!...வீட்டோடு படுக்கையாய்விட்டதாம்! எனக்கு என்ன பயம்என்றால் இது வந்தவேளை குழந்தைக்கு மறுபடியும் ஜுரம் எங்கு வந்துவிடுமோஎன்றுதான். ஒருவேளை குழந்தைக்கு ராத்திரி ஜுரம் எதாவது வந்தால் இதைக் கட்டாயம் உடைத்துத்தான் எறியப்போகிறேன். எனக்கு வரும் கோபத்தில் இதைத்தவிர வேறு வழிதெரியவில்லை—என்றாள்.

இதைக் கேட்ட சுதாவுக்குச் சட்டென்று ஒரு யோசனை தோன்றியது. தன் கணவனுக்குத்தான் ஒரு பேஷண்டும் இல்லாது திண்டாடுகிறாரே; இதை வாங்கிப்போனால் சதா ஜுர ஆட்கள் வருவார்களோ என்னவோ?...என்று. “சரி! அலமு! நீ ஏன்இந்த தர்மாமீடர்மேல் இவ்வளவு வெறுப்பு அடைகிறாய்? என்னிடம்கொடு. இதை நான் என் கணவருக்குக் கொடுத்துவிடுகிறேன். இந்த ராசி, கிசி என்பதில் எனக்கு

நம்பிக்கை கிடையாது'' என்றாள். இந்தச் சொற்கள் அலமுவின் காதில் அம்ருததாரைபோல் விழுந்தன. உடனே தர்மாமீடரை சுதாவிடம் கொடுத்துவிட்டு மறுகாரியம் செய்தாள். சுதாவும் தன் கணவரின் தர்மாமீடரை அலமுவுக்கு அனுப்பினாள்.

டாக்டர் சங்கர் டிஸ்பென்ஸரியில் பின்கட்டுடன் சிங்கம் கூண்டில் அடைப்பட்டு உலாவுவதுபோல் உலாவிக்கொண்டு இருந்தார். மருந்திற்கும்கூட ஒரு பேஷண்டு வராதது அவருக்குக் கோபம் கோபமாய் வந்தது. தனக்கு அதிகமான நோயாளிகள் வந்து நிறைவைக்காவிட்டாலும் தன் குடும்பத்திற்குவேண்டிய வருவாய்க்குத்தக்க நோயாளிகளாவது வந்துகொண்டு இருந்தார்கள். சொல்லி வைத்தாப்போல் புதிய தர்மாமீடர் வந்தநாளில் இருந்து ஒவ்வொருவராய்க் குறைந்து அன்று அசலே மருந்திற்கும் ஒருவன்கூட வராதது அவர் மனதை மிகவும் பாதித்தது. நேராய் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். சுதாவைக் கூப்பிட்டு, ''சுதா! போதும்போதும் நீ உன் சிநேகிதைக்கு செய்யும் உதவி! எந்தவேளையில் என் தர்மாமீடரை அலமுவுக்குக் கொடுத்துவிட்டு அவள் தர்மாமீடரை என்னிடம் தந்தாயோ அன்றையலிருந்து வழக்கமாய்வரும் நோயாளிகள்கூட வரவில்லை. நல்லராசியான தர்மாமீடர்தான். இதை முதலில் அவளிடம் கொடுத்துவிட்டு என் தர்மாமீடரை வாங்கிவா போ! அது என் தகப்பனார் வைத்துகொண்டு இருந்தது; ராசியானது; சீக்கிரம் வாங்கிவா போ'' என்றான். பாவம்! சுதா என்ன செய்வாள்? அவள் நினைத்தது ஒன்று, நடப்பது ஒன்று. அந்த தர்மாமீடர் நம்மிடம் வந்தால் சதா நோயாளிகளின் ஜுரத்தை அதிகப்படுத்திக்கொண்டே இருக்கும். நோயாளிகள் நம் கணவரைவிட்டுப் போகவேமாட்டார்கள்... என்று நினைத்தாள். இப்போதுதான் ராசி, நீசியின் ரகசியம் தெரிந்தது. அன்று அலமு எப்படி தர்மாமீடரைக் கண்டவுடன் வெறுத்துக்கொண்டாளோ அதைவிட அதிகமான கோபம் தர்மாமீடரிடத்தில் சுதாவுக்கு உண்டாகியது. தர்மாமீடருடன் நேராய் அலமுவின் வீட்டை அடைந்தாள். வழக்கம்போல் அலமு புன்சிரிப்புடன் சுதாவை வரவேற்றாள்.

சுதா:—போதும்மா உன் தர்மாமீடரின் ப்ரபாவம்! அதற்கு ஒரு சரித்திரமே சித்திரித்துவிடலாம்போல் இருக்கிறது. இந்த ராசி விஷயத்தில் எனக்கு நம்பிக்கையே கிடையாது. ராசி என்பது ஒன்று உண்டு என்பதை உன் தர்மாமீடர் நிரூபித்துவிட்டது. நம்பிக்கை இல்லாத எனக்கு நம்பிக்கை உண்டாக்கிவிட்டது. இந்த தர்மாமீடரில் ஏதோ கெடுதல் இருக்கிறது. இது வந்தவேளை வழக்கமாய் வரும் நோயாளிகள்கூட வருவதை நிறுத்திவிட்டது...போதும்மா! போதும்!...'இதை முதலில் உன் சிநேகிதை இடம்கொடுத்து

விட்டு என் தர்மாமீடரை வாங்கிவா'—என்று என்னை இப்போதே அனுப்பினர்...என்றாள். இதை எல்லாம் கேட்ட அலுமுவுக்கு ஷாக்அடித்ததுபோல் ஆய்விட்டது."அடராமா! ராமேச்வரம் போனாலும் சனீச்வரன் விடவில்லை....என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல் என்னை இந்தத் தர்மாமீடர் விடாதுபோல் இருக்கிறதே" என்று நினைத்துக்கொண்டு சுதாவின் தர்மாமீடரை வாயைத் திறக்காது கொண்டு கொடுத்தாள். தன் தர்மாமீடரை வாங்கி மேஜைமேல் வைத்தாள். சுதா விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பினாள்.

தன்னை எல்லோரும் ஒரே அடியாய்ப் பழிப்பது தர்மாமீடருக்குப் பொறுக்கவில்லையோ என்னவோ? பாவம்! மேஜை சரிவாய் இருந்ததால் கிறுகிறு என்று உருண்டுவந்து கீழே விழுந்து தன்னை நூறு சுக்கலாய் ஆக்கித் தன் யஜமானி அலுமுவுக்கு ச்ரமம் தராது மனநிம்மதியைக் கொடுத்தது! இதைப் பார்த்த அலுமுவுக்கு ஒரு பண்டம் வீணாய்விட்டதே என்று தோன்றாது, 'அதுமட்டும் உடைந்ததே' என்று சந்தோஷம்தான் உண்டாகியது!

உதிர்ந்த மலர்கள்—(வை. மு. கோ.)

"பணம் பத்தும் செய்யும்" என்று சொல்லிய பழமொழியைவிட, பணம் "பற்றையும் அறுக்கும்" என்று சொல்லும்படி உலகத்தில் பல விசித்திரங்கள் நடக்கின்றன. ஆனால் அந்தப் பணத்திற்குத்தான் மக்கள் பலபடியாகப் பாடுபடுகிறார்கள். இந்த ஆவலை பகவான்மீது வைத்தால் அவன் பாதத்தைப் பற்றும் நற்கதியமையுமல்லவா!

* * *

எதைச்செய்ய நினைத்தாலும் நினைத்தபடி எதுவுமே நடப்பதில்லை ஆனால் நினையாத காரியம் சில நடந்துவிடும்போது சில அல்பர்கள், "நான் இப்படிச் செய்யவேண்டுமென்றுதான் நினைத்தேன். அப்படியே ஆகியது" என்று பெருமை பேசுகிறார்கள்!

* * *

"மார்க்கதரிசி......தீர்க்கதரிசி"...என்று போற்றப்படும் மகான்கள் ஆயிரத்திற்கு ஒருவர் கிடைப்பதும் அரிது! ஆனால், அந்த அரிதான பிறவிகளிடமும் குற்றம் குறைகளைக் கற்பித்துப் பழித்துப் பாபமூட்டையைச் சுமக்கும் ஆத்மாக்களோ அனந்தம்! இதுதான் உலக விசித்திரங்களில் ஒன்று!"

பிரபந்தமும் பண்களும்

(கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

வெகு நாளாக எனக்கு நாலாயிர திவ்யப்ரபந்தத்தைப் பண்களுடனும் தாளங்களுடனும் சீரிய மதுரகானமாகக் கேட்க வேண்டும் என்று விருப்பம். சில பதிப்புகளில் பண்ணும் தாளமும் கூறப்பட்டிருப்பதை நான் கண்டேன். முதிர்ந்த குறிஞ்சி, நட்டபாடை, செருந்தி, வியந்தம், இந்தளம், கொல்லி, தக்கராகம், புறநீர்மை, முதலிய பண்களையும், எழொத்து, இடையொத்து, நடையொத்து, ஒன்பதொத்து முதலிய தாளங்களையும் பதிப்புகளில் கண்டபொழுது பல ஆராய்ச்சியாளர்களை அவைகளைப் பற்றி வினவினேன். தெளிவாக உண்மை விளங்கவில்லை. தேவாரப்பண்கள் நடைமுறையில் ஒருவாறு பழக்கத்தில் இருக்கின்றன. தமிழ் இசை மகாநாடுகளில் ப்ரோபஸர் பி. சாம்பமூர்த்தியும் மற்ற அறிஞர்களும் ஆராய்ச்சிசெய்து வருகின்றனர். திருவாய்மொழியைப்பற்றியவரையில் ஸ்ரீரங்கத்திலும் ஸ்ரீவில்லிபுத்தூரிலும் அரையர்கள் சங்கீத நடனரூபமாகக் கருத்தை விளக்கிக் கூறுகின்றார்கள். இவைகளைப் பற்றி அறிஞர்கள் நன்கு ஆராய்ச்சி செய்யவேண்டும். இந்தத் துறையில் "ஜகன் மோகினி"யில் அரியசேவை செய்யப்பட்டு வருகின்றது. ஸ்ரீமதி ஏ. ராஜம்மாள் ராகதாளங்களுடன் ஸ்வரப்படுத்தி அச்சிட்டுவருகிறார். மகாத்மாஜி சேவா சங்கத்திலும் சிறுமிகளுக்குப் பாட்டுப் பயிற்சி அளிக்கிறார். ஸ்ரீமதி ராஜம்மாளும் அவளுடைய நாட்டுப்பெண் ரங்கநாயகியும் பாடுவதை நான் கேள்வியுற்றேன். முறை மோகனமாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கிறது.

திவ்யப்ரபந்த பாசுரங்கள் பல அழகிய மெட்டுகளில் ரேடியோவிலும் பாடப்பட்டுவரவேணும். பிரபல வித்வான்களும் சங்கீதக்கச்சேரிகளில் பாடி மக்களை மகிழ்விக்கவேணும். கானரசமும் பக்தி ரசமும் சேர்ந்தால்தான் இரண்டுக்கும் புஷ்டி ஏற்படும். ஸ்ரீமதி ஏ. ராஜம்மாளுடைய முயற்சியை யாவரும் நன்கு மதித்துப் பாராட்டிச் சிறப்பெய்தும்படிச் செய்வது நம்மவர்களுடைய தேசியக்கடமையும் கலைக்கடமையும் மதக் கடமையும் ஆகும்.

விலைகொடுத்து வாங்கக்கூடிய சாமான்களை உடனே வாங்கலாம். பேரம்பேசலாம். வாங்காமலும்விடலாம். ஆனால் மதிப்பு என்கிற பொருளை விலைகொடுத்து வாங்கமுடியாது. அதை மதிப்பினாலேயேதான் வாங்கவேண்டும். அன்புக்குப் பதில் அன்பைத்தான் கொடுக்கவேண்டும். அதைவிட்டு பணத்தை நீட்டினால் பதம்குறைந்துவிடும்.

5. லகு

பா ம ம ம — ம த த த — த த த ப — நி நி நி த
அண்ட . . — க்குலத்து — க்கதி ப தி — யா . கி .
க ம ப ப — ப ப ப ப — மப தபபாபா — பத மக மா மா
இ ண் ட க் — குலத்தை — யெ . டுத் . துக் — க . ளை ந் . த .
ப ம ம க — ப த ஸ் ஸ் — ஸா ரீ — க ம க ரி
தொண்டக் — குலத்தி — லுள்ளீர் — வந்து .
ப ப த த — ரி ரி ஸ் ஸ் — நீ நீ ரி ஸ் நி த — ப ப ப ப
பண்டை . க் — கு . லத் — தை . த் . த . . — விர்ந்து

6. அடா

ஸ் ஸ் நி த — த த த த — நி த த த — த த த த
எந்தை . — தந்தை . — தந்தை . — தந்தை .
ப ப ப ப — ப த ப ப — ம ம ப ப — ம க க க
வந்து . — வழி வழி — யாட்செய் — கின்றோம்
மா ப ஸ் — ஸ் ஸ் ஸ் ஸ் — ஸ் ஸ் ஸ் ஸ் — நி த தா
அந்தியம் — போ . . தி — லரியுரு — வா . இ
பா த ப — த நி ஸா — நீ நீ ஸ் ரி ஸ் ரி — ஸ்நி தா தா தா
பந்த . — னை . தீ . — ரப்ப . ல் . — லாண்டு

7. பூரி கல்

ப ப ப ப — ப த ப ம — க க ம ம — ப ப ப ப
தீ . . யிற் — பொலிகின்ற — செஞ்சுட் — ரா . ழி
ப ப ப ப — ப த ப ம — க க க ம ப ம — க ரி ரீ ஸா ஸா
கோ . யிற் — பொறியா — லே . யொற் . — று ண் . . டு
ப ப ப ப — ப த த ப — ஸ் ஸ் ஸ் நி — ஸ் ரி ஸ் நி
மா . . யப் — பொருபடை — வா . . . — ண . னை .
ஸ் ஸ் ஸ் நி — ஸ் ரி ஸ் நி — த த த நி — த ப ப ம
பா . யச் — சுழற்றிய — வாழிவல் — லா .. னுக்குப்

8. குந்தல

ஸ ஸ ஸ ஸ் — மா ம ம — பா , ப — த த த த
நெய்யிடை — நல்லதோர் — சோறும் — நியதமும்
நி நி த த — ஸா ஸ் ஸ் — நி நி நி நி — த நி தப மா மா
கையடை — க் கா . யுங் — கழுத்துக்குப் — பூ . . . ணொடு
ம நி த த — ஸா ஸ் ஸ் — நீ த த — ஸ் ஸ் ஸ் ஸ்
மெய்யிட — நல்லதோர் — சாந்தமும் — தந்தென்னை
ஸ் நி ஸ் நி — ஸ நீ நி — நி த ப த — ம ம ம ம
பை . யு — டை நாக — ப்பகைக்கொடி — யா . னுக்கு

பல்லாண்டு

தாளம்: ஆதி

போதி

த்ரு | த்ரு

பா த ப — த நி ஸ்ா | நீ நீ ரி ஸ் நி த — ப ப ப ப ||
யசு . — ர ரி | ராக்க . . . — த . ரை . ||
ப ப த த — ஸ் ஸ் ஸ் ஸ் | ஸ் ப த த — ஸ் ஸ் ஸ் ஸ் ||
யிருடி . — கே . சன் | த . னக் — கு . . . ||
ரி ரி ம க — ஸ் ஸ் ஸ் ஸ் | நீநீ ரி ஸ் நி த — த ப த த ||
அடிதொழு — தாயிர | நாம . . ம் — சொல்லி ||
ப ப ப ப — ப த ம க | ப த ஸ் ப — த ஸ் ஸ் ஸ் ||
பல்லாண்டு — பல்லாயிர | த்தாண்டென்மி-னே . . . ||

ஞ

பா த ப — த நி ஸ் ஸ் | நீ ரீ ஸ் நி பா — பதநிநிபாமா ||
தம் மூ , — த்தப்பனேழ் | படிகால் —தொடங் . கி ||
க க ம ம — ப ப ப ப | த ப த த — ப ம ப ப ||
தி . ரு — வோ , ணத் | திருவி . — ழ . வில் ||
ஸ் ஸ் க க — ரி ரி ஸ் ஸ் | நீநீ ஸ்ரி ஸ்ரி —ஸ்நி தா தா தா ||
ய , ரி . — யை . ய . | ழித்த . — வ . . ஊ . ||
ப த ப ப — த நி ஸ் ரி | ஸ்நிபா தா தா — ப ம பா ||
.—பல்லாயிர--த்தாண்டென்று | பா . டு . — து , மே ||

யாணி

ப ப த த — ப த நி நி | த ப ப ப — ப ப ப ப ||
தி . கழ் — திருச் | சக்க . — ரத்தின் ||
ஸ ஸ ரி ரி — க க ம ரி | க ம ப ம — ப த ப ப ||
நின்று . — குடிகுடி | யாட்செய் — இன்றோம் ||
ஸ் ஸ் ஸ் ரி — க க க க | ரீ கா ரிக மக — ரீ ரீ ஸ்ா ஸ்ா ||
ஆ . யிர — ந்தோளும் | பொழிகு . . . — ரு . தி . ||
காரீ கம பத — பதநீத பமா | கா ரீ ரிக மக — ரி ஸ ஸா ||
பல்லா . . — ண்டு . . . | கூறு . . . — து . மே ||

வராளி

த த த த — தா நி த | பாபாபதநித— ப ம ம ம ||
அத்தா . — . . ணிச் | சே . வ . . . . — . . கமும் ||
ம ம த த — தா நி த | பாபாபதநித— பமமாமாமா ||
காது . — க்கு . | க்குண்ட. . . — . ல மும் ||
ஸ் ம ம ஸ் — ஸ் ஸ் ஸ் ஸ் | ஸ் நி நி நி — நி த த த ||
வெள் . ளு — . . . யி . | ரா . க்க — வல்ல . ||
ம ம த த — த த நி த | பாபாபதநித — ப ம ம ம ||
ப்பல்லாண் — . . டு . . | கூ . று . . . — . வனே ||

காளிதாசர் கனவு

4. இதய ராணி

(கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

ஆனால், என் விதியின் பயன், எங்களுடைய ஆசையை முறித்துவிட்டது. மேகசந்தேசத்தில் நான் சித்திரித்த 'காதலர் பிரிவு' எனக்கும் ஏற்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை, அதை நான் எழுதும்படி நேர்ந்ததுகூட தேவியின் கட்டளை தானே? அவள் தான் என்னுடைய வருங்கால நிலையைக் குறிப்பிட்டாளோ?...என்றுகூடத் தோன்றுகிறது.

ஒருநாள் சந்திரகலை ஒரு விசித்திர கனவு கண்டாள். ஒரு பூமாலை தன் மேல் விழுந்ததாகக் கனவு கண்டாள். திடுக்கிட்டு எழுந்தாள். திடீரென்று மாரடைப்பு ஏற்பட்டது. வைத்தியர்கள் வந்தார்கள். சிகிச்சைகள் பயன்படவில்லை, முடிவில் அவள் என்னையே உற்றுப்பார்த்தபடி உயிர்நீத்தாள்!

நான் துக்கம் தாங்கமுடியாமல் மூர்ச்சையானேன். கதறினேன். பிறகு இந்த அதிர்ஷ்டமற்ற நடைப்பிணம் எழுந்து அவளுடைய ஈமச்சடங்குகளைச் செய்தது. என் அன்பின் தேவதை, என் உயிர், என் இனிய சந்திரகலை போனபிறகு எனக்கு வாழ்க்கையில் என்ன இன்பம் இருக்கிறது? அதற்குப்பிறகு கலைவெற்றி, அரசனுடைய வெகுமானம், பொதுஜன ஆதரவு, ஒப்பற்ற புகழ், எதுவுமே எனக்கு மேலாகத் தோன்றவில்லை.

அவள் இறந்தபோது நான் இயற்றின சில சுலோகங்களையே பிறகு ரகுவம்சத்தில் அமைத்தேன்!

குஸுமான்யபி காத்ர ஸங்கமாத்
 ப்ரபவந்த்யாயுரபோஹிதும்யதி |
நபவிஷ்யதி ஹந்த சாதனம்
 கிமிவான் யத்ப்ரஹரிஷ்யதோவிதே: ||

அதவா ம்ருது வஸ்து ஹிம்ஸிதும்
 ம்ருதுனைவாரபதே ப்ரஜாந்தக: |
ஹிமஸேக விபத்திரத்ரமே
 நளினீபூர்வ நிதர்சனம்கதா ||

ஸ்ரகியம் யதி ஜீவிதாபஹா
 ஹ்ருதயே கிம்நிஹிதா நஹந்திமாம் |
விஷமப்யம்ருதம் க்வசித்பவேத்
 அம்ருதம் வாவிஷமீச்வரேச்சயா ||

சசினம் புனரேதி சர்வரீ
 தயிதா த்வந்த்வ சரம் பதத்ரிணம் |

இதிதௌ விரஹாந்தாக்ஷமௌ
  கதமத்யந்த கதாகமாம் தஹோ: ||

நவபல்லவ ஸம்ஸ்தரே பிதே
  ம்ருது தாயேக ததங்கமர்ப்பிதம் |
ததிதம் விஷஹிஷ்யதே கதம்
  வதவாமோருசிதாதிரோஹணம் ||

த்ருதிரஸ்தமிதா ரதிச்ச்யுதா
  விரதம் கேயம் ருதுர்நிருத்ஸவ: |
கதமாபரண ப்ரயோஜனம்
  பரிசூன்யம் சயனீயமத்யமே: ||

(மலர்களுங்கூட உடல்மீது படுவதால் உயிரைப்போக்கக் கூடுமானல் கொல்ல விரும்பும் கடவுளுக்கு எதுதான் கருவியாகாது?

யமன் மென்மையுள்ள பொருளை, மென்மையான பொருளினலேயே கொல்வதற்குத் தொடங்குகிருன். பனிவிழுவதால் அழியும் தாமரை இதற்கு முதல் உதாரணமென்று நான் நினைக்கிறேன்.

இந்த மாலை உயிரைக் கவரக்கூடுமானல் அது என் மார்பில் என்னல்வைக்கப்பட்டும் என்னைஏன் கொல்லவில்லை? கடவுளின் ஆணையால் சில இடங்களில் விஷமும் அமிர்தமாக மாறும், அமிர்தமும் விஷமாக மாறும்.

இரவு சந்திரனை மறுபடியும் அடைகின்றது. இணைபிரியாத சக்ரவாகப் பறவையை பெண்பறவை திரும்பவும் அடைகின்றது. ஆகையால் பிரிவை அவைகள் பொறுக்க முடியும். திரும்பாமல் சென்றுவிட்ட நீ என்னைத் துயரப்படுத்தாமல் இருக்கமுடியுமா?

மென்மையான உன் உடல் புதிய தளிர்ப் படுக்கையிலும் வருந்துமே? அது சிதையில் வைப்பதை எப்படிப் பொறுக்கும்?

இப்பொழுது என் மனவன்மை அழிந்தது. இன்பம் துலைந்தது. இசை மாண்டது. பருவம் இன்பத்தைக்கொடுக்கும் சக்தியை இழந்தது. அணிகலம் பயனிழந்தது. படுக்கை சூனியமாயிற்று.)

இந்தச் செய்யுள்களைக் கூறிமுடித்ததும் காளிதாசர் துயரத்தைத் தாங்கமுடியாமல் கீழேவிழுந்து மூர்ச்சித்தார். நான் அவருக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து அவரைத் தேற்றினேன்,

11. ஏயம்பட உரை:

ஓர் ஊரில் சந்திரா, சுந்திரா என்ற இரண்டு பெண்கள் இருந்தார்கள். அவர்கள் இரண்டுபேரும் ஒரே பள்ளியில் படித்துவந்தார்கள். சந்திராவை பள்ளியில் கண்டால் உபாத்தியாயர், உபாத்தியாயினி, பிள்ளைகள் யாவருக்கும் சந்தோஷம். அவள் யாரையும் கடிந்து பேசமாட்டாள். படிப்பிலும் கெட்டிக்காரி. பள்ளிக்கூடத்திற்கே ஒரு திலகம்போல் விளங்கி வந்தாள். சுந்திராவுக்கு யாரைக்கண்டாலும் பிடிக்காது. எல்லோரிடமும் சரிக்குவிழுவாள். யாரையும் சண்டைக்கு இழுப்பாள். உபாத்தியாயர் கொடுக்கும் பாடத்தைப் படிக்க மாட்டாள். எப்பொழுதும் உபாத்தியாயர் மேலேயே கோள் சொல்லிக்கொண்டிருப்பாள். அந்த வருஷம் பரீக்ஷைக்கு நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. சந்திரா, சுந்திராவைப் பார்த்து, "தோழீ! படிக்காமல் ஏன் இம்மாதிரி கோள் சொல்லிக் கொண்டிருக்கின்றாய்? இம்மாதிரியிருந்தால் இந்த வருஷம் பரீக்ஷயில் நீ தேர்ச்சி பெறமுடியாதே" என்று ஏயம்படக் கூறினாள். சுந்திரா கேட்காமல், இவளையும் கண்டபடி திட்டி விட்டுச்சென்றாள். கடைசியில் பரீக்ஷயில் சந்திரா, பள்ளிக் கூடத்திற்கே, முதலாகத்தேரிப் பரிசுகள் பெற்றாள். சுந்திரா தோல்வியடைந்து அதே வகுப்பில் அவமானத்துடன் மறுபடியும் படிக்கவேண்டியதாயிற்று.

12. இணக்கமறிந்திணங்கு:

ஓர் ஊரில் மாதவன் என்ற ஓர் ஏழைப் பையன் இருந்தான். அநேக பணக்காரர் வீட்டுப் பெண்கள் அவனுடைய சிநேகத்தை அடைய ஆசைகொண்டார்கள். மாதவன் எல்லோரிடமும் அன்பாகப்பேசுவான். படிப்பில் கெட்டிக்காரன் என்று கர்வம் கொள்ளமாட்டான். அதே பள்ளிக்கூடத்தில், சோமசேகர் என்ற ஓர் பணக்கார வாலிபன் இருந்தான். அவன் மஹாமுரடன், கர்வி. யாரையும் அலட்சியமாகப் பேசுவான். இவன் மாதவனிடம் சிநேகம் பாராட்ட ஆரம்பித்தான். இதைக் கண்ட பிள்ளைகள் மாதவனைப் பார்த்து, "சேகருடன் நட்புக்கொள்ளாதே; ஆபத்தாக முடியும்" என்று சொன்னார்கள்; மாதவன் கேட்கவில்லை. உபாத்தியாயர்களும் கண்டித்தார்கள். இப்படியிருக்கும்போது சேகர் அந்த வகுப்பில் இருந்த பையனின் கைகடிகாரத்தை திருடிவிட்டான். சேகர், "நான் எடுக்கவில்லை. மாதவன்தான் திருடினான்." என்று சாதித்துவிட்டான். அவன் பணக்காரன்வீட்டுப்பிள்ளை. அவன் வார்த்தையில் நம்பிக்கைகொண்டார்கள். அப்போது அவன் சிநேகிதர்கள் எல்லோரும் மனம் வருந்தி, இதனுல் தானே "ஔவைப்பாட்டி 'இணக்கமறிந்து இணங்கு' என்று கூறினாள்" என்று பேசிக்கொண்டார்கள்.

மேனுட்டுத் தத்துவம்

ஹெராகிளிட்டஸ்—(Heraclitus)

ரா. ஸ்ரீ. தேசிகன், M. A.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

ஹெராகிளிட்டஸ் அளவுகடந்த தருக்குள்ளவர்; தம்மிடத்தில் எல்லையற்ற நம்பிக்கை உள்ளவர் என்பது தெரியவருகின்றது. ஏகாந்தமும் இயற்கையின் எழிலும் அவரை உருவாக்கின. அந்நாள் உலாவி வந்த மூடக் கொள்கைகளை எதிர்த்தார். கல்லால் சமைக்கப்பட்ட விக்கிரகங்களை வணங்கினுல் என்ன பயன்?...என்ற வாதத்தை எழுப்பும் இயல்புள்ளவர். பாவத்தைக் கழுவுவதற்காகப் புரியப்படும் வேள்விகள், மண்ணை அகற்றுவதற்காகச் சேற்றில் காலை வைப்பதை ஒக்கும் என்று பிரசாரஞ் செய்தார். தாம் ஒருவருக்கும் மாணுக்கராயில்லை என்ற அகம்பாவம் பிடித்தவர் இவர் என்பதில் சந்தேகமில்லை. எல்லாம் தம் உள்ளத்தில் தானே உதயமாகிவிட்டனபோலப் பேசுகின்ருர்.

சலிக்கின்ற உலகத்தில் ஏதாவது ஒன்று அழிவற்று நிற்க வேண்டும் என்று தத்துவஞானிகள் சொல்லுகின்றனர். அக்னிதான் எல்லாவற்றிற்கும் மூலசக்தி என்று ஹெராகிளிட்டஸ் கூறின செய்தியை முன்பே குறிப்பிட்டுள்ளோம். ஒன்று பலவிதமாக மாறுகின்றது; அநேகம் ஒன்ருய்க் கரைகின்றன; எல்லாம் மாறிமாறிவருகின்றன...என்ற தத்துவத்தைப் பௌதிகசாத்திரம் ஒப்புக்கொள்ளுகின்றதன்ருே? கணத்திற்குக் கணம் எல்லாம் மாறும் என்றுகூறும் புத்தர்கொள்கையின் சாயையை இங்கே பார்க்கின்ருேம். எங்கும் போராட்டந்தான் தோன்றுகின்றது. இறுதியில் எல்லாம் ஓர் அமைதி அடைகின்றன என்று கூறுகிற ஹெகலுக்கும் அவர் சுவட்டைப் பின்பற்றும் கால்மார்க்ஸ்ஸுக்கும் ஹெராகிளிட்டஸ் மூலபுருஷர் என்று சொன்னுல் அது மிகை ஆகாது.

மனிதர்கள் யார் தெரியுமா? இறக்கும் தெய்வங்கள்; தெய்வங்கள் அழியா மனிதர்களே...இம் முறையில் ஹெராகிளிட்டஸ் பேசுகின்ருர் என்றதை ஹெகல் (Hegel) தம் தத்துவ சரித்திரத்தில்(History of Philosophy) குறிக்கின்ருர். நாம் வாழ்ந்தால் நம் ஆத்மா இறந்துவிடுகின்றது; நாம் இறந்தால், நம் ஆத்மா உயிர்பெற்றெழுகின்றது;—இத்தகைய பொன்மொழிகள் போற்றுதற்குரியவை என்று ஹெகல் கருதுகின்ருர்.

பார்மினிடீஸ்—(Parmenides of Elea)

பைரஸ்ஸின் (Pyres) மகனை பார்மினிடீஸ் எலியாப் பிரதேசத்தைச் சார்ந்தவர். டையஜினீஸ் இவரை (கி. மு. 504-500) இந்நூற்ருண்டுகளில் பிரசித்திபெற்று வாழ்ந்தவர் என்று கருதுகின்றனர். சினேவுடன் (Zeno) தமது 65-ஆம் ஆண்டில் பார்மனிடீஸ் ஏதன்ஸ் மகாநகரத்திற்கு வந்து சாக்கரடீஸ்ஸோடு

சம்பாஷித்ததாகப் பிளேட்டோ கூறுகின்றூர். இது பொருத்த மன்று என்று ஹெகல் மொழிவதை நாம் பார்க்கின்றோம். சபைனீஸ்ஸின் மாணுக்கராக அரிஸ்டாடில் இவரை நினைக்கின்றூர். பைத்தகோரரின் கொள்கையின் சாயை இவரிடத்தில் அடிக்கின்றது. ஆர்பிக் கொள்கைகளின் அடிச்சுவடுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

அந்தக்காலத்து வழக்கப்படி இவர் தம் கொள்கைகளைச் செய்யுள் மூலமாக வெளியிட்டார் என்று ஜே. ஏ. ஸைமண்ட்ஸ் (J. A. Symonds) கருதுகிறுர். இக்கருத்தைப் பர்னட் ஆதரிக்கவில்லை. மற்ற ஞானிகள் உரைநடையில் தம்தம் கருத்துக்களை வெளியிட்டனர். இவரோ செய்யுளில் தம் கொள்கைகளைக் கோயில் கொள்ளச் செய்தார் என்பதுதான் உண்மை என்று பர்னட் யாதொரு ஐயமுமின்றிச் சாற்றுகிறுர். எம்பிடாகிளிஸ் இவர் சுவட்டைப் பின்பற்றினதாகத் தெரிகிறது. ஹெராகிளிட்டஸ் எல்லாம் மாறுகின்றன என்று கூறினுர். இவரோ ஓர் அகண்ட தத்துவந்தான் இருக்கிறது; அது அநாதி, விகாரமற்றது; விகாரமாய்த் தோன்றுகின்றன யாவும் இந்திரிய சேஷ்டைகளால் எழுந்தவையே தவிர வேறில்லை. அது சூன்னியத்திலிருந்து தோன்றவில்லை. சூன்னியத்திலிருந்து தோன்றுகிறது என்று சொன்னுல் அது பொருந்தாது. ஒன்றிலிருந்து தோன்றினது என்று கூறப்போனுலும் தோன்றினது மறைந்துவிடும். அது' தானிருக்கிறது மற்றதெல்லாம் மித்யை. அது எது? என்று பர்னட் கேட்கின்றூர்

காலக்கடலால் ஒதுக்கப்பட்ட பார்மினிடிஸ்ஸின் சிந்தனைச் சிதைவுகளை நோக்கினோமானல், உண்மை புலனுகும். இவர் தம் நூலை இரண்டு பாகங்களாகப் பிரித்திருக்கிறுர். உண்மையின் பாதை-(The Way of Truth) கருத்தின் பாதை, (The Way of Opinion). 'அதுதான்' இருக்கிறது என்று அவர் கூறுகிற வாக்கியத்தைப் பார்த்தால் உபநிஷத்து வாக்கியம்போலக் காட்சி அளிக்கின்றது. அங்கே காலதேசம் கிடையாது. காலதேசம் யாவும் தோற்றங்களே.

எங்கே தொடங்கினுல் என்ன? எல்லாம் எனக்கு ஒன்றே; மீண்டும் அந்த இடத்திற்கே நான் வருவேன். அது வட்டமாயிருக்கிறது என்று அவர் சொல்லுகிறுர். வட்டவடிவமாயிருக்கிறது என்று கூறியதால் கேவலம் பிரகிருதி தத்துவத்தைத் தான் அவர் சொல்லியிருக்கவேண்டும் என்று பர்னட்டும் ரசலும் மொழிகின்றனர். இவர் ஏகபிரகிருதி வாதத்தின் (Materialistic Monism) தந்தையா? அல்லது, ஏக பாரமார்த்திக வாதத்தின் (Idealistic Monism) தந்தையா? என்ற கேள்விகளை எழுப்புகின்றனர். ஆனுல் அகண்டமாயுள்ள பிரக்ருதியும் அகண்டமாயுள்ள பரமாத்மாவும் ஒன்றுதான் என்று காம்பர்ஸ் (Gomperz) சாற்றுகின்றூர்.

பூர்ணத்திலிருந்து பூர்ணத்தைத்தான் எடுக்கமுடியும் என்ற உபநிஷத்வாக்கியம் கிரேக்க தேசத்திற்குப் போயிருக்கலாமா? என்று தோன்றுகின்றது. எதைத் தொடங்கினுலும், அதே இடத்திற்கே வருகின்றேன் என்ற கருத்து உபநிஷத்தின் மொழிபெயர்ப்பாயிருக்கலாம். என்று கருத இடமுண்டு. மேலும் காணப்

படுகிற பொருளும் காண்கின்றேனும் ஒன்று என்கிறார். கருத்தும், கருதப்படுகிற பொருளும்ஒன்றுதான். மேலும் இறந்துபோனது ஒருவனுடைய நினைவிற்கு வருமானால் அது இறந்ததாகாது என்று பார்மினிடீஸ் வாதிக்கின்றார். இவ்வாதங்களை ரசல் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் சாமுவேல் பட்லர் கூறுகின்றது நம் சிந்தனைக்கு வராமற்போகாது. எவருடைய சிந்தனையிலாவது நாம் உறைந்தோமானால் நமக்கு அழிவில்லைஎன்று அவர் கூறுகின்றார். அழியா ஆண்டவன் சிந்தனைவிட்டு நாம் அகலமுடியாது. அக்காரணத்தால் நாம் இறப்பதற்கில்லை...என்ற உண்மை தர்க்கரீதியில் பிறக்குமன்றோ? ஒன்பதாம் நூற்றாண்டில் அவதரித்த சங்கராசாரியார் மாயாவாதத்தை முதல் முதலில் எழுப்பவில்லை, கவுடபாதரின் அடிச்சுவட்டைத்தான் சங்கரரும் பின்பற்றுகின்றார். சங்கரருக்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே பார்மினிடீஸ் இந்த மாயாவாதத்தைப் பேசக்கேட்ட நாம் பெருவியப்பில் ஆழாமலிருக்கமுடியாது.

எம்பிடாக்கிளிஸ் [Empedokles]

எல்லாப் பொருள்களும் ஒன்றே என்று இதுகாறும் நாம் ஆராய்ச்சி செய்துவந்த தத்துவஞானிகள் கூறினார்கள். ஒன்றுதான் உண்மைப் பொருள் என்று நாம் முடிவுக்கு வருவோமானால் அநேகமாய்க் காட்சி அளிக்கிற நிலை இந்திரியங்களால் கற்பனை செய்யப்பட்டதே என்று பார்மினிடீஸ் வாதிக்கின்றார். பார்மினிடீஸஸுக்கும் பிறகு தோன்றிய ஞானிகள் ஏக தத்துவவாதத்தை அப்படியே ஒப்புக்கொள்ளவில்லை. சிலர் பார்மினிடீஸ்ஸை ஆதரித்துப் பேசினார்கள். ஆனால், அவர்கள் புதிய கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவில்லை;வேறு சிலர் ஹெராகிளிட்டஸ்ஸின் தத்துவத்தின் மகிமையை மிகைப்படுத்தி மொழிந்தனர். எம்பிடாகிலிஸ், அனக்சகோராஸ்—இவ்விருவரும் பகுதத்துவ வாதத்தை (Pluralism) எழுப்பினாலும் அந்தத்துறையில் அணுவாதிகள் (Atomists) சென்ற அத்தனை தூரம் செல்லவில்லை. கவி அரசு உலகப்புகழ் எய்திய வர்ஜில் மாண்டுவாப் பிரதேசத்திற்கு எப்படித் திலகமாய் விளங்கினாரோ அப்படியே அக்கரகாஸஉக்கு (Acragos) திலகமாய் விளங்கினர் எம்பிடாகிலிஸ் என்று காம்பர்ஸ் (Gomperz) கூறுகின்றார். இவர் ஒரு பெரும் ப்ரபு வம்சத்தைச் சார்ந்தவர். சிசிலியிலுள்ள (Sicily) இந்தக் குடும்பம் புகழ்ச் சிகரத்தை அடைந்த காலத்தில் (கி. மு. 500—480) இவர் தோன்றியிருக்கவேண்டும். கி.மு.496-ல் இவர் பாட்டன் ஒலிம்பியாவில் நான்கு குதிரை கட்டிய ரத ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்றார் என்று தெரிகின்றது.கி.மு.470ல் கொடுங்கோல் ஆட்சி புரிந்த திராசிடேயஸ் (Thrasidaeus) என்பவனை அடித்துத் துரத்தும் கைங்கரியத்தில் இவர் தந்தையான மீடோ (Meto) ஈடுபட்டார். எம்பிடாகிலிஸ் ஒரு சிற்றரசனாய் ஆட்சிபுரிந்திருக்கக்கூடும். பிரபு ஆட்சியில் கலந்துகொண்டிருக்கலாம். ஒரு சிறிய பிரபு வட்டத்தில் உழைத்துப் புகழ் அடைவதைவிடக் குடியரசுப் பிரதேசங்களில் தம்முடைய ஆற்றலைக் காட்டினால் தமக்குப் பல நன்மைகள் கிடைக்கக்கூடும் என்றகருத்தில் இந்த அற்ப அரச போகத்தைத் துறந்தார். மேலும், இவர் அணி இலக்கணப் பள்ளிகளை நிறுவியவர்களில் ஒருவர். சொல்

லின் செல்வன்; ஆழ்ந்த சிந்தனையாளர். கைக்குவரும் ஒரு மௌலியை ஒருவன் துறந்தான் என்றால் அவன் புகழ் என்றைக்கும் நிற்குமன்றோ? மேலும் எம்பிடாகிலிஸ் திகழ்ந்த காலம் குழப்பம் கொந்தளித்து எங்கும் பரவும் காலம். மக்களின் நிலை மாறி மாறி எழும் கடலின் நிலையை ஒக்கும். அதிகாரவர்க்கத்தைச் சார்ந்தவர்கள் பேர் அலைகளின்மீது மிதப்பவர்களை ஒக்கின்றனர். தனித்த மனிதன் தன் வாழ்க்கையை அமைதியாய்க் கழிக்கலாம். அரசியலின் பயங்கரமான சுழல்களில் சிக்கி ஆழவேண்டிய நிர்ப்பந்தமுமில்லை. இதை உணர்ந்தே அதிகார வர்க்கத்தினின்று இவர் தம்மைக் விலக்கிக்கொண்டார்.

ஆனாலும் மக்களால் தெய்வமாகப் போற்றப்பட்டும் எம்பிடாகிலிஸ் துரத்தப்பட்டார். பெலப்பனீசில் இவருக்கு ஓர் ஆபத்து நேர்ந்தது. அந்த ஆபத்தை இவருக்கு விரோதியான ஒருவன்தான் விளைவித்திருக்கவேண்டும். அங்கே இவர் உயிர்நீத்தார். இப்பேர்பட்ட மகானுக்கு இத்தகைய மரணம் தகுதியன்று. புராணங்களை நூற்கத் தொடங்கிவிட்டனர். எட்ணு (Aetna) எரிமலைத் துவாரத்திற்குள் இவர் குதித்தார். இயற்கைபுரியும் கோரக்காட்சிகளைக் கண்டு இன்புறும் பொருட்டு இவர் இப்படிச் செய்தார் போலும். இதைவிஷவமாகவைத்து ஆர்னல்ட் ஒரு கவி பாடியிருக்கிறார். இவர் சோதியில் கலந்து விண்ணை அடைந்தார் என்று மற்றொரு புராணம் கூறுகின்றது. மகான்கள் விஷயத்தில் இப்படிக்கற்பனைத் தறியில் புராணங்களை நூற்பது எல்லா நாட்டிற்கும் பொருந்தும். ஞானசம்பந்தர் சோதியில் கலந்தார் என்ற கதை நமக்குக் கிடைக்கின்றது: அவருக்கு மணம் நடந்து கொண்டிருக்கிற பொழுது அவருக்கு மிகவும் விரோதியாக இருந்த சமணர்கள் சமயம் பார்த்துத் தீயை வைத்திருக்கலாம். உண்மை யாதோ? ஒன்றுஞ் சொல்லுவதற்கில்லை.

எம்பிடாகிலிஸ் மாந்தர்களின் உள்ளங்களைக் கவர்ந்தார்... ஒரு வேந்தன் தெய்வத்திற்குக் கீழ்ப்பட்டவனே; என்னை ஒரு மனிதனாகக் கருதாதீர்கள்; நான் ஒரு தெய்வம்! என்னை வணங்க எல்லோரும் வாரீர், வாரீர்...என்று முழக்கஞ் செய்தார். பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் இவர் பொன்னடிக் கீழ் விழுந்தனர். 'எங்களை நல்வழியில் செலுத்துங்கள்' என்று சிலர் முறையிடுவார்கள், 'எங்கள் வாழ்க்கையின் இடுக்கண்களைக் களைந்து எங்களுக்கு அமைதி நல்குங்கள்' என்று வேறு சிலர் பிரார்த்தனை செய்வார்களாம்.

திரியுங்காற்றுகளெல்லாம் என் செங்கோலுக்கே அடிமை செய்கின்றன: சூரிய கிரகணங்களின் மர்மங்களைத் திறந்து காட்டும் திறவுகோல் என்னிடமிருக்கிறது: அழிக்கும் மழைகளின் ரகசியங்களை நன்குணர்வேன...என்று வீரவாசகம் பேசுவார். அவர் ஆற்றிய சில செயல்கள் மனிதர்களிடையே அவர்பால் ஒருதிட நம்பிக்கை பிறக்கும்படிச் செய்தன. செலினஸ் (Selinus) என்ற நகரம் பல தொத்து நோய்களால் பீடிக்கப்பட்டிருந்தது. நீர் தேக்கத்தால் இவைகள் நிகழ்ந்தன என்றதைத் தம் பழுத்த அறிவால் அறிந்து, அந் நீர்த் தேக்கத்தை அகற்றிவிட்டார். அவ்விடத்தைவிட்டு நோய்கள் பறந்தன. இவருடைய தெய்வப்

பிறப்பு ஊர்ஜிதமாகிவிட்டது. தம் ஊர் காற்று வசதி இல்லாமல் இருந்தது. மலையில் ஒரு துவாரஞ் செய்தார். அந்தத் துவாரத்தின் வழியாய் வடக்கேயிருந்து காற்று புகுந்து வீசத் தொடங்கிற்று. அக்காற்று மாந்தர்களுக்கு இன்பத்தை அளித்தது. எஞ்சினியர் தொழிலில் மட்டும் இவர் திறமை வெளிவந்தது என்று நினைக்காதீர்கள். மருத்துவக் கலையிலும் இவர் ஒரு பெரிய ஸ்தானத்தை வகிக்கலுற்ருர். நாடி விழுந்து முப்பது நாளாக அறிவு இழந்து கிடந்த ஒரு ஸ்திரீயை இவர் விழிக்கச் செய்தார் என்ற செய்தி நமக்குக் கிடைக்கின்றது. இவருடைய மாணக்கரான ஜார்ஜியஸ் என்பவர் இவரை ஒரு மந்திரவாதியாகக் கருதுகின்ருர்.

பொன்னும் பித்தளையும் செம்புங் கலந்த இவருடைய இயல்பைத் துருவி ஆராய்ந்து பார்ப்பது சாதாரணக்காரியமன்று. அணியிலக்கணக்குழவிக்குத் தொட்டிலாய் அமைந்த அந்தத் தீவில் எல்லாவற்றையும் அதிகப்படுத்திக் கூறும் தன்மை வேரூன்றியிருந்தது என்று யாதொரு ஐயமுமின்றிக்கூறலாம். எல்லாக் கலைகளும் படாடோபத்தைக் காட்டுகின்றன. மிகைப்படக் கூறுவது அவருடைய சதையோடும் ரத்தத்தோடும் பிறந்தது என்று சொன்னலும் மிகப் பொருந்தும். இந்த ஞானியின் தத்துவத்திற்கு தலை ஊற்று எது என்பதைக் கண்டுபிடிக்க முடியாது பல மூலங்களிலிருந்து வழிந்ததாகத் தெரிகின்றது. ஏதோ ஒரு பாதையில் இது செல்லுகிறதாகவும் தோன்றவில்லை. அரசியல் வாதி, சொல்வன்மையாளன, மருத்துவன், ஞானி— இவர்கள் எல்லோரும் சேர்ந்து உருவெடுத்ததுபோல இவர் விளங்குகின்ருர், என்று காம்பர்ஸ் (Gomperz) கருதுகின்ருர். இதே கருத்தைத் தான் ரசலும் வெளியிடுகினருர். பைத்தகோரரிடம் ஞானி, தீர்க்கதரிசி, பௌதிகசாஸ்திரி, மேல்புல் மேய்கிறவன்— இவர்களுடைய அம்சங்களின அவியலைப் பார்த்தோம். இத்தகைய அவியல் பூர்ணத்தை எமபிடாகிளிஸ்ஸில் அடைந்துவிட்டது என்று நகைச்சுவை ததும்ப ரசல் மொழிகின்ருர். இத்தகைய ஞானியின தத்துவத்தைத் துருவி ஆராய்வோம்.

மஹாத்மாஜி சேவா சங்கம் (Regd.)

(66 வடக்குக் குளக்கரை வீதி) திருவல்லிக்கேணி

கோடை விடுமுறை முடிந்து,

புதிய வகுப்புகள் ஆரம்பம்.

1. பாலர் வித்யாலயம்.

நான்கு வயதிலிருந்து ஏழுவயதுக் குட்பட்ட சிறுவர், சிறுமியர்க்கு முறையே 'நர்ஸரி' வகுப்பு, முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு முதலியவை சென்ற ஜூன் 21வ திங்கட்கிழமை முதல் சங்கத்தின சொந்தக்கட்டிடத்தில் நடைபெறுகின்றன. காலை 10 மணிமுதல் 1 மணிவரையில் படிப்பு. மாலை 4 முதல்

183181

5 வரை விளையாட்டு. மாதச்சம்பளம் ஓரே ரூபாய்தான். குழந்தையின் தாயார் அல்லது சகோதரி சங்கத்தின் அங்கத்தினராக இருக்கவேண்டும்: அதற்கு வருடச் சந்தா ரூ. மூன்று மாதச் சந்தாவாகவும் கட்டலாம். இது தவிர வேறு ப்ரவேசக் கட்டணம் கிடையாது.

2. E. S. L. C. வகுப்பு.

ஸ்த்ரீகளுக்காகவே ப்ரத்யேகமாக இந்த வகுப்பு தினமும் பிற்பகல் 3 மணிமுதல் 6 மணிவரை, 26 தோடித்தெருவில் நடைபெறுகின்றது. மாதச் சம்பளம் இரண்டே ரூபாய்தான். ஒவ்வொரு மாணவியும் சங்கத்தின் அங்கத்தினராக இருக்க வேண்டும்: வருடச் சந்தா ரூ. 3. மாதச் சந்தா அணா 4.

3. PREPARATORY—தயாரிப்பு வகுப்பு

குறிப்பிட்ட விஷயங்களில் மட்டும் விசேஷப்பயிற்சி அளிப்பதற்காக இந்த வகுப்புகள் நடத்தப்படும். இது சம்பந்தமான கட்டண விகிதங்கள் அவரவர் தேவைக்குத் தகுந்தபடி விசாரித்து அறிவிக்கப்படும்.

4. டைப்ரைட்டிங்,ஷார்ட்ஹாண்ட் வகுப்பு.

ஸ்த்ரீகளுக்கு ஸ்த்ரீகளாலேயே ஷை வகுப்பு, 26 தோடித் தெருவில் தினமும் காலையில் நடைபெறுகின்றது. டைப்புக்கு மட்டும் மாதச்சம்பளம் ரூ. 2. டைப், ஷார்ட்ஹாண்ட் இரண்டும்சேர்ந்து ரூ. 3–8–0. (S. S. L. C. முடித்துள்ளவர்கள் ஷை பரீக்ஷைக்குப் போகலாம்.) சங்கச் சந்தா வழக்கம்போல்.

5. இசை வகுப்பு.

வீணை, (ரூ 6.), பிடில், (ரூ. 5), வாய்ப்பாட்டு, (ரூ 3,2,1) வகுப்புகளும், இலவச இசைவகுப்புகளும் நடைபெறுகின்றன. விவரங்கள் கேட்டு அறியவும்.

6. ஹிந்தி வகுப்புகள்.

ப்ராத்மிக் முதல் விசாரத் வரை 5 வகுப்புகள் நடைபெறுகின்றன. விவரங்கள் கேட்டு அறியவும்.

7. தையல் வகுப்பு.

இலவச வகுப்புகளும் விசேஷப்பயிற்சி வகுப்புகளும் நடைபெறுகின்றன. விவரங்கள் கேட்டு அறியவும்.

ஷை எல்லா வகுப்புகளும் திறமைவாய்ந்த பெண்மணிகளாலேயே, அங்கத்தினர்களுக்கும் அவர்கள் குழந்தைகளுக்காகவும், நடத்தப்படுகின்றன. அனைவரும் ஆதரவளித்து சங்கத்தின் தொண்டு வெற்றிபெறும்படி உதவக் கோருகிறோம்.

தலைவி ஹரிகதா கலாநிதி C. ஸரஸ்வதிபாய்	ஸ்த்ரீகளுக்கு மட்டும்	வை. மு. கோதைநாயகி G. R. ஜெயலக்ஷ்மி B. Sc. கௌரவகாரியதரிசிகள்

வாழ்க்கை தீபம்

வை. மு. கோ.

ஸௌ. லக்ஷ்மிக்கு ஆசீர்வாதம்; உபயகுசலம்.

உன் கடிதம் கிடைத்தது. நீ உன் உறவினர்கள் கல்யாணங்களுக்குப் போயிருந்ததாயும் சொன்னபடி சீர்வகைகள் செய்யாததால் பெரிய சண்டை உண்டாகி முகூர்த்தத்திற்கு முன்பு சிலர் கோவித்துக்கொண்டுபோய் விட்டதாயும், கல்யாண முகூர்த்தமாகிய உடனே சிலர் முடுக்கிக்கொண்டுபோய் விட்டதாயும், இதைப்பார்க்கப் பெரிய அதிர்ச்சியாக இருந்ததென்றும் எழுதியிருக்கிறாய். இவ்வளவு தூரம் நீ இவைகளை அறிந்து உணர்ச்சியுடன் எழுதியிருப்பதை நான் வரவேற்கிறேன். கல்யாண மென்றால் சாமான்யப்பட்டது என்று நினைத்துவிட்டாயா? அடேயப்பா! "வீட்டைக் கட்டிப்பாரு, கல்யாணத்தைப் பண்ணிப்பாரு" என்கிற பழமொழி சாமான்யமாகவா பிறந்தது. பழமொழி உதயமாகி எத்தனையோ காலமாகிவிட்டது. அக்காலத்திலேயே இந்த இரண்டிற்கும் உள்ள கஷ்டங்களைத் தராசு எடைபோட்டு அனுபவித்துப் பழமொழி செய்திருக்கையில் இக்காலத்தில் கேட்கவேண்டுமா! வீடுகட்டும் சாமான்களுக்கு ஆகும் செலவைவிட கூலி பலமடங்காகிறது! அதேபோல் சம்மந்திகளின் — மாப்பிள்ளையின் இயற்கையான மதிப்பு, உயர்வு இவைகளைக் காட்டிலும் படாடோபமும், சுற்றுமுற்றுமுள்ள சில்லரை மனிதர்களின் ஆர்ப்பாட்டமும், அமுத்தலும் தடபுடல் படுகிறது! இந்த நிலைமையில் தங்களுடைய சுயமானமதிப்பையே மறந்துபோய் சுற்றுமுற்றுமுள்ள சூழ் நிலையைச் சுட்டிக்காட்டிப் பேசுகிறார்கள். அதற்குத் தக்கபடிக் கல்யாணத்தை நடத்தப் பிள்ளைவீட்டார் திட்டம்வேறு இடுகிறார்கள். நீ இப்போதுதானே இந்த உலக அனுபவ விசித்திரங்களைப் பார்க்கவந்திருக்கிறாய். நான் பழைய பெருச்சாளியல்லவா? இத்தகைய அனுபவங்களை அளவிடமுடியாத நிலைமையில் பார்த்திருக்கிறேன். இன்னமும் பார்க்கப்போகிறேன். சமீபத்தில் நான் இரண்டு மூன்று கல்யாணங்களைப் பார்த்தேன். அதன் விசித்திரத்தை நீ நேரில் கண்டிருந்தால் எப்படித்தான் வியந்திருப்பாயோ! பிள்ளைவீட்டார் என்கிற பட்டத்தை நெற்றியில் கட்டிக்கொண்டு என்ன அட்டகாஸம் அல்பத்தனமாகச் செய்கிறார்கள் ,தெரியுமா? சீர்வகைகள் எத்தனை ரூபாய்க்குச் செய்வதாகச் சொன்னார்களோ அவை அப்படியே இருக்கிறதா? என்பதைக் கல்யாணமான பிறகு எடைபோட்டுப் பார்த்து ஒருசிலர் அல்பத்தனமாய்ச் சண்டையிடுவதை நான் பார்த்திருக்கிறேன். கல்யாணத்திற்கு முன்பே இம்மாதிரியொரு ரகளையைச் செய்தவர்களை நான் இதுவரை பார்த்ததே இல்லை.

உன் மாமியார்கூட...தோடு எத்தனை காரட்டு? எத்தனை ரூபாய்?...என்று நாஸூக்காகக்கேட்டுத் தெரிந்துகொண்டாளேயன்றி, பெண்ணை அழைத்துக் கழற்றிப் பார்க்கவில்லை. ஒரு கல்யாணத்தினர் வந்து இறங்கியவுடனே கல்யாணப் பெண்ணைத் தனிமையில் அழைத்து ஆண்களும் பெண்களுமாகச் சுற்றிக்கொண்டு மூக்குத் திருகாணிமுதல் கண்ணாடி வளையல் வரையில் கழற்றி ஒவ்வொன்றாக மதிப்பிட்டும் எடைபோட்டும் கல்லில் தேய்த்துப் பார்த்தும் பேசிய அல்பத்தனத்தை எண்ணிஎண்ணி வெறுப்புறுகிறேன். அதோடா விட்டார்கள்! புடவையைத் தமது கைகளையே தராசுபோல் உபயோகித்து இப்படியும் அப்படியும் ஆட்டிப்பார்த்து இத்தனை பலந்தான் இருக்கும்...இத்தனை விலை அதிகமில்லையோ? தானுமா?...என்று பேசியபோது எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஒரு கூறைச்சேலை வாங்கித் தமது வீட்டிற்குப் புதிதாக வரப்போகும் க்ருகலக்ஷ்மிபோன்ற நாட்டுப்பெண்ணுக்குக் கொடுக்க விதியற்ற—மனமற்ற—இவர்கள் சகலமும் பெண்வீட்டில் செய்திருக்கையில் அட்டகாஸமும் கெட்டுப் பேச்சும் பேசுவதற்கு வெட்கமில்லையா? ஒரு நாட்டுப்பெண் வருவதென்றால் அது சாமான்யமானதா! தங்கள் குடியின் விளக்கை ஏற்றி ப்ரகாசிக்கச்செய்யும் குலக்கொழுந்து என்று நினைக்காமல் இப்படியா பார்ப்பது?...என்று சிரித்தேன். வெள்ளிப்பாத்திரத்தையும் அப்படியே பார்ப்பதும் விமர்சனம் செய்வதும்...ஐயைய...அஸங்கியம் சகிக்கவில்லை! கூடவிருந்த பசங்கள் எல்லாரும் பார்த்துச் சிரித்தது என்றால் பெரியவர்களைப்பற்றிப் பேசவேண்டுமா? இத்தனை ரகளைகளைச் செய்துவிட்டு கல்யாணப்பிள்ளையிடம் ஆணும் பெண்ணும் சேர்ந்து சரியானபடி வத்திவைத்து அந்தப் பிள்ளையின் மனத்தைக் கலக்கி அழவைத்துவிட்டார்கள். இத்தனை பேர்களுடைய போதனைக்கும் நல்லவேளையாகப் பையன் மனத்தைத் தளரவிடாது அவர்களையே திட்டிய பெருந்தன்மையையும் நானே கண்டு வியப்படைந்தேன். இன்னொரு அதிசயம் கேட்டயா? ஜானுவாஸ் உடைக்காகப் பணத்தை நூற்றுக்கணக்காக வாங்கிக்கொண்டு பழைய ஸூட்டு ஸெட்டுக்களை இஸ்திரி செய்து ஜமாய்த்துவிட்டார்கள்! இதைவிட அவமானம் வேறு என்னவேணும்! இதுபோல் அல்பத்தனம் எத்தனையோ ஒரு கல்யாணத்தில் நடந்தது!

இன்னொரு கல்யாணம் வெகுவெகு நேர்த்தியாய் நேர்மையான கண்ணியமான முறையில் நடந்தது போற்றத்தக்கதாயும் இருந்தது. சரிக்குச்சரியான சம்மந்தம். ஒருவருக்கொருவர் பணத்திலும் குணத்திலும் உத்யோக கவுரவத்திலும் வெகு பொருத்தமானவர்கள்! கல்யாண தம்பதிகளும் அப்படியே; ஜோடி மிகப்பொருத்தமாயிருந்தது! இருதாரத்தாரில் மீங்கள்

என்ன சீர்செய்கிறீர்கள்? வரதக்ஷிணைப் பிசாசை எத்தனை கொடுப்பீர்கள்? என்பதுபோன்ற அல்பவார்த்தைகளைப் பிள்ளை வீட்டார் எடுக்கவே இல்லை. நீங்கள் என்ன நகைபோடுகிறீர்கள்; புடவை என்ன வாங்குகிறீர்கள்... என்ற கீழ்த்தரமான கேள்வியைப் பெண்வீட்டார் கேட்கவே இல்லை. கல்யாண ஏற்பாடுகள் தடபுடலாக நடக்கும்போதுங்கூட இத்தகைய அல்ப வார்த்தைகள் பிறக்காமல் வெகு சிறப்பாக இருதாரத்தாரும் பழையபடி முறையேசெய்த விவாகம் அத்புதமாய் நடந்தது. அதற்குச் சிகரம் வைத்ததுபோல் மாலையில்வரவேற்பும் கச்சேரியும் அபாரமாய் நடந்தது. இதில்பாராட்டக்கூடிய முறையில் சம்மந்திகள் ஜோடிஜோடியாக நின்று நகைத்த முகத்துடன் அன்பாக வரவேற்று உபசரித்த அழகை எல்லோரும் கற்றுக்கொள்ளவேண்டும். அத்தனை விமரிசையாய்—சிறப்பாய்—நடந்தது. வரதக்ஷிணை வாங்காத கல்யாணமென்றாலே எனக்கு அபார சந்தோஷம். வரதக்ஷிணையும் வாங்காமல் அதற்குப்பதில்சிலர் கவுரவமான முறையில்பணத்தைக் கறந்துவிடுகிறார்களே! அதுபோலல்லாமல் சீர்வகைகளையும் கட்டுதிட்டம் செய்து கேட்காமல் சமரஸமாய் சுமுகமாய் நடந்த கல்யாணத்தைப் புகழுவதில் நான் பெருமையையடைகிறேன். இத்தகைய மனமொத்த சம்மந்தத்தில் த்ருஷ்டி பரிகாரம் போல் நேருக்குநேர் சம்மந்தியில்லாத இரண்டொருவர், "இன்னும் அழகான பெண்ணாக வந்திருக்கலாம்.... இன்னும் உயர்ந்த நகைகள் போட்டிருக்கலாம்..." என்கிற தமது கடமைப் பேச்சை விமர்சனம் செய்யாமலும் இல்லை. இது த்ருஷ்டிதோஷம் கழியும் நன்மையே என்று எண்ணினேன்.

இன்னொரு கல்யாணத்தின் அழகைப் பாரு, லக்ஷ்மி! இரண்டு பெண்களுக்குச் சேர்த்துச் கல்யாணம் செய்தார்கள். ஒரே சமமான வரதக்ஷிணை, சீர், முதலியன எடுத்தாயிற்று... கல்யாணமாகியபிறகு சம்மந்தி மரியாதை செய்து சாப்பிட உட்காரவைப்பதில் சாப்பிட வாருங்கள் என்று கூப்பிடும்போது... அந்த சம்மந்திகளை, அந்த மாப்பிள்ளையை முதலில் கூப்பிட்டீர்கள். அந்தப் பக்கமாய்த்தான் பார்த்துச்சொன்னீர்கள். ஆகையால் நாங்கள் சாப்பிடமாட்டோம். அவர்களை இலையிலிருந்து எழுந்து போகச்செய்து வேறு இலைகளைப் போட்டு ஒரே சமயத்தில் இருதாரத்தினரையும் அழைத்தால்தான் வருவோம்... என்று ஆரம்பித்துப் பெரிய ரகளையாகிவிட்டது; பாவம்! பெண்களை வேண்டுமானால் இரண்டு பெற்றுவிட்டார்கள். சம்மந்திகளையும் மாப்பிள்ளைகளையும் அழைக்க வாய் ஒன்றுதானே! என்ன செய்வார்கள்? பாவம்! பரிதாபமாக இருந்தது!...

தனது பந்துக்கள் ஆபீஸ் உத்யோகஸ்தர்கள் முதலியவர்களை எல்லாம் சாப்பிட அழைத்திருந்தார்கள். எல்லோர்

முன்பும் ரஸாபாஸமான யுத்தம் நடப்பதுபோல் சண்டையில் மூன்றுமணி காலம் கழிந்தது! இலையில் பரிமாறியதை எல்லாம் எடுத்துவிட்டு எல்லோரையும் எழுந்து போகச்செய்து, பிறகு வேறு இலைபோட்டுச் சாப்பிடச் செய்து வைத்தார்கள்! இது எத்தனை அவமானமான அல்பத்தனம்! படித்து உத்யோகம் செய்யும் சம்மந்தியும் மாப்பிள்ளையும் இப்படிச் செய்தால் படிக்காத நாட்டுப்புறத்து மனிதர்கள் சண்டை இடுகிறதில் ஆச்சரியம் என்ன! சாப்பாட்டு விஷயத்தில் இத்தகைய மரியாதையை எதிர்பார்க்கும் அவர்கள் நாட்டுப்பெண் விஷயத்தில் எப்படி நடப்பார்களோ? ...என்கிற புதிய கவலை பெண்ணைப் பெற்றவர்களுக்கு வந்துவிட்டது.

இனிமேல் கல்யாணங்களுக்குப்போனால் இவைகளை எல்லாம் ஆழ்ந்து கவனித்துக்கொண்டு நமக்கே இவைகளைப் பாடமாக்கிக்கொள்ளவேண்டும். தம் வீடுகளில் நாய்போல் வேலை செய்யும் மனிதர்கள் பிள்ளைவீட்டுச் சம்மந்திகள் என்கிற பட்டத்தில் அமர்ந்துவிட்டபொழுது பெண்வீட்டார் கொண்டு வைத்த பலகாரங்கள் காப்பி இவைகளை எடுத்துச் சாப்பிடக் கவுரவக் குறைவாம்! ஆள்போடவில்லை என்று குட்டிச்சண்டையை ஒரு ப்ரமாதமாக்கிச் சிலர் கிளப்புகிறார்கள்! லக்ஷ்மீ! இதுபோன்ற வேடிக்கைகள் அனந்தம் இருக்கிறது. பார்த்தவைகளை எல்லாம் எழுதுகிறேன்; நீயும் எழுது. உன் நாத்தனார் மகனுக்குப் பேரம் படிந்ததா? பையன் எத்தனை ஆயிரம் மதிப்பில் இன்று மார்க்கெட்டில் விலைபோகிறான்? அதை எழுது!

இங்ஙனம், மா. மீ.

பண்டைத் தமிழ் மகன் பண்பு

"பரிசு பெற்ற புலவர் (பெருஞ்சித்திரனார்) தம் மனைவியைப் பார்த்து, 'குமண வள்ளல் அளித்த பெரும் செல்வம் இது: இப்பொருளை உன்னை விரும்பி வாழும் பெண்களுக்குக் கொடு; உன்னால் விரும்பப்படும் எளிய மகளிர்க்கும் கொடு; உன் சுற்றத்தாரின் பசி நீங்கும்படி தாராளமாகக் கொடு; கடன்பெற்ற பொருள்களை அவரவரிடம் திருப்பிக் கொடு; 'யாருக்குக் கொடுக்கலாம்? யாருக்குக் கொடுக்கக் கூடாது?' என்று எண்ணாமல், என்னையும் கேளாமல், நீண்டநாள் வைத்துக்கொண்டு வாழலாமே' என்றும் நினையாமல் நீயும் எல்லாருக்கும் தாராளமாகக் கொடு. நானும் கொடுப்பேன்'—என்று கூறினரென்பதாம்."—புறநானூறு

[இது ஸ்ரீ V. M. G. இண்டர்—தமிழ் நோட்ஸ் பக்கம் 18-ல் தலைப்பிலேயுள்ளது. இதை இண்டர் தமிழ் மாணவர்களேயன்றித் தமிழறிந்தார் அனைவரும் மனனம்செய்து இதிலுள்ள கருத்துகளை வாழ்க்கையில் பின்பற்றுவாராக. —பத்திராதிபர்

வாழ்க்கையில் ஒரு குறிப்பு

வை. மு. கோ. அவர்களுக்கு நமஸ்காரம்.

நான் பல வருஷங்களாக உங்கள் மோகினியைப் படிக்கும் பயித்தியம் பிடித்தவன். அதில் வரும் வாழ்க்கையில் ஒருகுறிப்பு என்கிற தலைப்பின் விஷயத்தை நாங்கள் மிகமிக ரஸமாகப்படித்து இன்புறுகிறோம். என்னையும் ஒரு குறிப்பு எழுதும்படி ஆசை தூண்டுகிறது; எழுதுகிறேன்.

நான் அக்ரிகல்சரல் டிபார்ட்மெண்டில் வேலை பார்க்கும் ஒரு சாதாரண உத்யோகஸ்தன். எனக்கு இரண்டு பெண்களும், நான்கு பிள்ளைகளும் உண்டு; என் மூத்த பெண்ணுக்கு பகவான் இயற்கையிலேயே நல்ல அழகையும் அறிவையும் கொடுத்திருக்கிறார். அவள் நாலாவது வகுப்பு படிக்கும்போது என் சகோதரியின் மகளுக்கு க்ராமத்தில் கல்யாணம் நிச்சயமானது; அதற்காக நாங்கள் போயிருந்தோம், கல்யாணத்தன்று முதல் நாள் பண விஷயமான தகராறில் தடபுடல் சண்டையும் கல்யாணம் நின்று போகும்படியான அவமானமும் உண்டாகிவிட்டது. கல்யாண மாப்பிள்ளை பெரிய பணக்காரன்; என் அக்காவும் பணக்காரி; அப்படி இருந்தும் தகராறு முத்திவிட்டதுதான் அதிசயம்; கல்யாணப் பையன் என் மகள் நீலாம்பாளைப் பார்த்ததும், ''காலணா செலவின்றி இதே முகூர்த்தத்தில் இவளைக் கல்யாணம் செய்து கொள்கிறேன், கொடுக்கும்படி கேளுங்கள்'' என்று சொல்லி அனுப்பினான்.

உண்மையில் கதைகளில் படிப்பதுபோல் எனக்குத் தோன்றியதேயன்றி உண்மையில் நடப்பதாகத் தோன்றவே இல்லை. என் சகோதரியின் விரோதத்திற்குப் பாத்திரமாகும்படியும், ஏழையான நான் பணக்கார சம்பந்தம் செய்து கஷ்டப்படும்படியாயும் நேருமே என்று இந்த சம்மந்தம் செய்ய பயந்தேன். எனது சின்ன மாமா பெரிய ஜோஸியர். அவர் உடனே ஜாதகம் பார்த்து, ''அந்தப் பையனுக்காகத்தான் உன் பெண் பிறந்திருக்கிறாள்'. என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். வேலை செய்யும் வேடிக்கையை யாரால் மாற்றமுடியும்? கூடப்பிறந்தவனாயிருந்தால்கூட என் சகோதரிக்குப் பணக்காரர், ஏழை என்கிற வித்யாஸ மனப்பான்மையும் பணத்திமிரால் ஏற்பட்ட கர்வமும் உண்டு. அதை மட்டந் தட்டவே இந்தச் சண்டை உண்டாயிற்று என்று எல்லோரும் சொன்னார்கள். ஆச்சரியத்திலும் ஆச்சரியம். என்பிள்ளை ஸீதாராமனுக்கும் என் சகோதரியின் மகளுக்கும் ஒரே வயசுதான் வித்யாஸம். அந்த நிமிஷத்தில் காலவெள்ளம் புரண்டு எல்லோருடைய மனத்தையும் மாற்றிவிட்ட ஆச்சரியத்தைபற்றி இப்போது கூட நான் அதிசயப்படுகிறேன. என் புதல்வி நீலாவை அந்தப் பையனுக்கும் என் சகோதரியின் புதல்வியை என் மகனுக்கும் அதே முகூர்த்தத்தில் விவாகம் நடந்தது. இதை யாராவது நம்புவார்களா? என் சகோதரியின் செருக்கும் குறைந்துவிட்டது. எங்கள் குடும்பத்தில் ஐக்யமும் சந்தோஷமும் நிறைந்திருக்கிறது. இந்தச் சம்பவங்கள் நடந்து 12 வருஷங்களாகிவிட்டன; நான் இப்போது பேரன் பேத்திகளுடன் குலாவுகிறேன்; ரிட்டயர் ஆகிவிட்டேன். இதை நீங்கள் கட்டாயம் மோகினியில் போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

—''உண்மை விளம்பி''

பழமையின் பெருமை

"அபாடா!...இந்த மாதந்தான் அதிகப்படி எந்தச் செலவு மில்லை. நிம்மதியாகப் பொழுதைக் கழிக்கலாம்" என்று கோவிந்தன் ஒரு மூச்சுவிட்டான். பாவம்! அவனுக்கு வயது அப்படி ஒன்றும் அதிகம் ஆய்விடவில்லை. எனினும் கவலையும் ஏக்கமும் வயதைவிட அதிகமாகக் குடிபுகுந்துவிட்டதால் இதன் பலனைச் சிறிச்சிறி விழுவதைத்தவிர வேறு ஒன்றுமேமுடியாத நிலைமைக்கு வந்துவிட்டான். அவன் கண் முன்பு அவனது தினக் குறிப்புப் புத்தகம் கண்ணைச் சிமிட்டித் தன்னை எடுத்துப் பார்க்கும்படிச் செய்ததால் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே அதைத் திறந்து புரட்டிப் பார்த்தான்.

இதுவரையில் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொருவித செலவு அதிகப்படியாக உண்டாகிக் கடன் வாங்கிச் செய்யும்படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் தன்னுடைய தாயாருடைய சங்கிலியை விற்றுக் கடனைத் தீர்க்கும்படியான சந்தர்ப்பம் வாய்த்தபோது தான் அவன் மனது வெடித்துவிடும் போன்ற துக்கம் பீரிக் கொண்டு வந்தது.

லக்ஷரூபாய் சொத்து இருக்கிறது என்று ஒருவன் பெருமைப்படுவதைவிட காலணு கடன் இல்லை என்கிற பெருமையை அடைகிறதுதான் உயர்வு...என்கிற உறுதியைக் கொண்டிருந்ததனல் உயிருக்கு உயிரான சங்கிலியை விற்ருன். கடன் என்கிற பதமே இல்லாதபடிக்கு சகலமான சில்லரைக் கடனையும் கொடுத்தபிறகுதான் அவனுடைய மனத்தில் சாந்தி நிலவியது.

தினக் குறிப்புப் புத்தகத்தைப் புரட்டியதில் இதே தேதி, இதே நாளில்தான் சென்ற வருஷம் சங்கிலியை விற்ற விவரம் கண்ணில்பட்டு அதன் உணர்ச்சி வயப்பட்டான். தன் தாயாரைப் பார்ப்பதுபோல் சங்கிலியைப் பார்த்துக்கொண்டிருந்தது போய்விட்டதே என்று நினைக்க மனது குழப்பியது. அது சமயம் இவன் மனைவி சிரித்த முகத்துடன் அங்கு வந்து, 'ஒரு முக்யமான விஷயம் பேசலாமா?" என்ருள்.

சிள்ளென்று சிறிவிழுந்தபடியே, "என்ன முக்யமான விஷயம்? சொல்லித் தொலை" என்ருன். கணவனின் சுபாவமறிந்த கண்ணம்மாள் சற்றுத் தியங்கியபடியே, "அதி முக்யமான விஷயந் தான். உங்கம்மாவின் சங்கிலியை வாங்கியவர்கள் அது பழய மாதிரியாயிருப்பதால் அழித்துப் பண்ண ஏற்பாடு செய்தார்கள். தட்டான், 'இப்படியே வித்துவிட்டு வேறு சவரன் வாங்கிச்செய்ய லாமே' என்ருனும். இதை நம் பக்கத்துவீட்டு மாமி சொன்னுள். வீட்டில் பெரியவர்களின் நகை ஞாபகார்த்தமாயிருப்பதுதான் மங்களகரமாம். அதனல் எப்படியாவது அதை வாங்கிவிடுவதற்காக என்னுடைய வளையல்கள் இரண்டை விற்று இதை வாங்கி விட எண்ணுகிறேன். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்" என்ருள்.

கடனுக்குப பயந்தே கோவிந்தன தாயின் சங்கிலயை விற்றவன், அது வீட்டிலிருக்கவேணும் என்கிற ஆசைக்காகக் கடன் வாங்கவும் துணிந்தான். மனைவியின் கை வளைகளை விற்ருல் மொட்டைக் கையாக இருக்கும். கடன்வாங்கிச் சங்கிலியைவாங்கிக் கடனை அடைப்பது என்றே முடிவு செய்துவிட்டான்! பெற்ற தாயின் மீதுள்ள விச்வாசம் நகையிலும் ப்ரதிபலித்தது!

குணக் குன்று

வை. மு. கோ.

109-வது நாவல்

14

தன் மகளைக் காணவில்லையே என்ற கவலையுடன் காய்க்கடி உபத்திரவச் செய்தியும் கூடச்சேர்ந்து மீனாக்ஷியம்மாளின் நெஞ்சைப் புண்ணாக்கிவிட்டது... ஊரார் வீட்டு நகைகளும், தங்கம் வெள்ளி சாமான்களும்கூடப் போய்விட்டதே!...... கிரிஜாவும் கூடச்சேர்ந்து போயிருப்பதால் அவள் வீட்டாருக்கு என்ன பதில் சொல்வது?...என்கிற பெருந்திகில் பிடித்துக்கொண்டு வாட்டுவதால் ஓரே ஏக்கமும் துக்கமும் அடைந்து படுக்கையில் சாய்ந்துவிட்டாள்.

மீனாக்ஷியின் கையாளாகிய வேலைக்காரத் தாயாரம்மாளுக்கு விஷயம் இன்னது என்பது தெரியவில்லை எனினும் காலையில் சென்ற பெண்கள் இன்னும் வாராததால் ஏதோ கோளாறு நடந்துவிட்டது என்ற சந்தேகம்மட்டும் நன்றாகத் தோன்றியது. அதைப் பூர்ணமாக நிவ்ருத்தி செய்து கொள்ளும் சமயம் எப்போது வாய்க்கும்?.........யாரைக் கேட்பது?...என்று தவித்துக்கொண்டிருந்தாள்.

தன் எஜமானியம்மாள் இத்தனை நேரம் இருந்த உத்ஸாகம் குன்றிப்போய் ஓரேயடியாய்ப் படுத்துவிட்ட சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளச் சமயம் பார்த்திருந்தவள் நேரே அவ்வறையில் ஏதோ காரியமாய் வருவதுபோல வந்து அப்போதுதான் எஜமானியைப் பார்ப்பதாக நடித்து, "அம்மா, நீங்களா இங்கேபடுத்துக்கிட்டிருக்கிங்க! என்னம்மா உடம்புக்கு?......ஜுரம் கிரம் வந்திருக்குதுங்களா?" என்று மிகமிக அங்கலாய்ப்புடன் கேட்டுத் தொட்டுப்பார்த்தாள்.

மீனாக்ஷியம்மாளின் கண்களில் நீர் வழிகிறது. தேகம் பூராவும் கவலையால் நடுக்குற்று வெயர்வை வெள்ளத்தில் நீராடி மிதப்பதுபோல் ஜில்லிட்டிருப்பதைக் கண்டு உண்மையில் திடுக்கிட்டு, "அம்மா! இதென்னம்மா! உடம்பு எப்படியோ இருக்குதே! சின்ன ஐயாவெ கூப்பிடட்டுமா? ஏம்மா! நம்ப சின்ன கொயந்தை வனஜாம்மா இன்னும் வரக்காணுமே" என்று வெகு கனிவுடன் கேட்டாள்.

நெஞ்சையழுத்தும் எந்தத் துக்கத்தையும் சுவருடனாவது சொல்லி ஆறு! என்கிற பழமொழிப்படிக்கு மீனாக்ஷியின் நெஞ்சு வெடித்துவிடும்போல் அழுத்தும் வேதனையை எப்படி

யாவது இறக்கிச் சிறிது சாந்தியடைய எண்ணித் துடிக்கும் சமயம் தாயி வந்து கேட்டதும் துக்கம் பீரிக்கொண்டு வந்து விட்டது. "தாயி! என்னடி செய்வேன்? குழந்தைகளைக் காணவில்லையே! எங்கு யார் அழைத்துக்கொண்டு போய் விட்டார்களோ? தெரியாமல் துடிக்கிறேண்டி! என் ப்ராணன் இப்படியே போய்விடக் கூடாதா? வீட்டில் கல்யாண விருந்து நடக்கும்போது இப்படியாடீ அலங்கோலமாகிவிடும்!... என்று ப்ரலாபிக்கவே ஆரம்பித்துவிட்டாள்.

தாயி:—அம்மா! என் வவுறு கொதிக்கிற கொதிப்புக்கு அளவே சொல்ல முடியாதம்மா! ஊர் ஒம்மலே ஒங்களுக்கு வந்திடுச்சுங்க! அதோடெ மருமவ வந்த வேளே—கால்வாசி—நல்லாவே இல்லீங்க! இப்பிடியா கொயந்தெயெக் காணுமே பண்ணிப்புடும்?...

மீனு:—தாயி! என் மனசுலேகூட அப்பிடித்தாண்டி தோணுது. இதுக்கென்னடீ பண்ரது? யார் கிட்டயாச்சும் சொன்னு சிரிப்பாங்க; இல்லேயா? வந்த பிடாரி இருந்த பிடாரியை ஓட்டிவிட்டதாம்...என்று பழமொழி சொல்வாங்க; அதுபோல் கண்ணான பொண்ணு கொள்ளை நகையோடே. எங்கேயடி மாயமாய் மறைஞ்சிருக்கும்? என் ப்ராணனே போயிடும் போலே இருக்கிறது தாயி! எங்காவது செத்துப் போயிருக்குமோ!...

தாயி:—சேச்சே! ஏம்மா இப்படிப் பயப்படுறீங்க? தங்கமான ஒங்களுக்கு ஒரு கொறையும் வாராதுங்க!......அம்மா! நான் சொல்ரதைக் கேக்கிறீங்களா? எங்க ஊட்டுக்குப் பக்கத்துலே ஒருஜோசியக்காரன் இருக்கான்; அவனுக்கு மந்தாம், தந்தாம் அல்லாம் தெரியும். ஒரு குறி கேட்டாக்கா அப்படியே உளுமையெச் சொல்லிடுவான். நீங்க ஐயாவுக்குத் தெரியாமே வாங்க. நானு இட்டுக்கிட்டுப் போரேன். விசயத்தே தெரிஞ்சுகிட்டு வந்து தேடிப்புடிச்சுக்கலாம். சொல்லாமெ கொள்ளாமெ வாங்க—என்றாள்.

எந்த ஒரு விஷயமும் தங்களுக்காகத் தோன்றாவிடினும் பிறர் எடுத்துச் சொல்லிவிட்டால் அதில் ஒரு ஊக்கமும் நம்பிக்கையும் பிறந்து பிடித்துக்கொள்வது வழக்கம். அதுபோல் கலங்கித் தவிக்கும் உள்ளத்துடன் படுத்திருந்த மீனாக்ஷியின் நிலைமை அயோமயமயமான நிலைமையிலிருந்து கலங்கியதேயன்றி ஜோஸியம் கேட்கத் தோன்றவில்லை. தாயி சொன்னதைக் கேட்டவுடனேயே எங்கிருந்தோ ஜோஸியத்தில் நம்பிக்கையும் ஆசையும் தலைதூக்கிவிட்டது!

சடக்கென்று எழுந்து உட்கார்ந்த மீனாக்ஷி, தாயி! இத்தனை நேரம் எனக்கு இந்த யோசனையே தோன்றவில்லை. நம்ம பெரிய ஐயா, சின்ன ஐயா இருவருக்கும் இதெல்லாம்

சற்றும் பிடிக்காது. அவர்களுக்குத் தெரியாமல் எப்படியடி போவது? ரகஸியமாய்ப் போய்க் கேட்டுக்கொண்டு ஒரு கொடியில் வந்துவிட வேணும். உன்னால் ஏற்பாடு செய்ய முடியுமா?" என்றாள்.

தாயி:—ஓ! பேஷாய் முடியும்! நீங்க இப்பவே கையில் ஒரு வெத்திலைபாக்கு, சூடம், தேங்காய், பழம் கொஞ்சம் ரூபாய் இதே எடுத்துக்கிட்டு ஓடனே வாங்க; இதோ பக்கத்துலே தானே என் ஊடு இருக்குது—என்று மேலும் உத்ஸாகப் படுத்தினாள்.

மீனாக்ஷி தாயி சொல்லியபடி சகலத்தையும் எடுத்துக் கொண்டு ஒருவருக்கும் தெரியாமல் சென்றாள். சாதாரணமாய் தினம் பலமணி நேரம் உழைப்பதும் நடப்பதும் சகஜமாக உள்ள உழைப்பாளிகளுக்கு நடையைப்பற்றிக் கவலையே இல்லை. அதுவும் தட்டாமல் சாதாரணமாகவே தோன்றும். அதிகம் நடந்து பழக்கமில்லாத மீனாக்ஷிக்கு அந்தவேளையில் நடப்பதே வெகு ச்ரமமாயும் பெருமூச்சு வாங்கும்படியாயும் ஆய்விட்டது. பல சந்துக்களைத் தாண்டிக்கொண்டு தாயி காட்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

சாம்பிராணிவத்தி சாம்பிராணிக்கட்டியின் தூபவாஸனை கம்மென்று மூக்கைத் துளைத்தது; ஏற்கெனவே வந்துள்ள கும்பல் ஒரு பட்டாளம் உட்கார்ந்திருந்தார்கள். "இதில் யாராவது தனக்குத் தெரிந்தவர்கள் வந்திருக்கிறார்களோ?"... என்கிற கலக்கம் மீனாக்ஷியின் மனத்தை உலுக்கியது. எப்படி யாவது தான் நாடிவந்த காரியம் ஸித்தியாகிவிட்டால் போதும் என்கிற ஆவலுடன் தாயிக்குப் பின்னால் பதுங்கிப் பதுங்கி நின்றாள்.

தாயி தடதடவென்று அந்த சோசியனருகில் சென்று, "சாமீ! பெரியமனுசா வீட்டு எசமானியம்மா வந்திருக்காங்க; தயவுசெஞ்சு முதல்லே சொல்லியனுப்பிடணும். சரியானபடி சன்மானம் கொடுப்பாங்க" என்று ரகஸியமாய்ச் சொன்னாள்.

பணம் பத்தும் செய்யுமல்லவா? உடனே அருகிலிருந் தவர்களை விலகிப்போகச் சொல்லிவிட்டு, மீனாக்ஷியை அருகில் அழைத்து அமரச்செய்து முகத்தை உற்றுப்பார்த்தான்... "பறி போச்சு!....பெருங்கொள்ளை போச்சு!"...என்று தானே சொல்லியதைக் கேட்ட மீனாக்ஷியை அப்படியே நெருப்பில் தூக்கி எறிந்ததுபோலிருந்தது. மறுபடி உடல் நடுங்கத் துடங்கிவிட்டது.

இந்தச் சாமியார் வார்த்தையைக் கேட்ட தாயி "ஆமாங்க ஆமாம்! கொள்ளைதான் பூட்டுதுங்க! சாமான்ய கொள்ளை இல்லீங்க. ஒருகுறி சொல்லுங்க! விஷயம் ரொம்ப பெரிசுங்க" என்று தானே சகலத்தையும் முன்கூட்டி விளக்குவதுபோல் சொன்னாள்.

சாமியார் ஏதோ சக்கரம் போட்டார். 108க்குள் ஒரு நம்பர் சொல்லும்படிக் கேட்டார். 100 என்று மீனாக்ஷி ஹீனஸ்வரத்தில் சொன்னாள். ஏதேதோ கணக்குகள் போட்டுப் பார்த்துவிட்டு, "அம்மணீ! பெரிய நஷ்டத்தில்தான் பலன் கிடைக்குது. ஏகப்பட்ட பொருள் சேதம் என்ன பொருள் காணவில்லே? ...என்று அவன் முடிப்பதற்குள், தாயி "பொருள் மட்டுமா? ஆயிரக்கணக்கான நகைகளைப் போட்டுக்கிட்டு போன பொண்களேயே காணலீலே சாமி"...என்றாள்.

"ஆ!......அப்படிச் சொல்லு! சுக்ரன் சம்மந்தமிருப்ப தால் பொருள் வைரமாக இருக்கவேண்டும்! வைரம் நகை யாகத்தானே இருக்கும்! நகையைப் பெண்கள்தானே அணி வார்கள்! அதான் ஸ்பஷ்டமாகத் தெரியுதே!...என்று முடிப் பதற்குள்! ஐயோ! நாய்கூடல்ல கடிச்சுட்டதாம்" என்று அலறினாள்'... தாயி.

"அதானே கேட்டேன்; அங்காரகன், கேது இருவரும் இருக்கறப்போ கட்டாயம் நாயோ நரியோ கடிக்கத்தானே செய்திருக்கும்! பெண்களை ஒரு கொடிய கொள்ளைக்காரன்... இல்லைஇல்லை... துஷ்டன்...எவனோ கடத்திப்போய்விட்டான்.

"ஐயோ! என் குழந்தையைபா? எந்த இடத்திலே இருக்கா சொல்லுங்களேன்" என்று மீனாக்ஷி அலறி விட்டாள்..."அம்மணீ! கலங்காதீர்கள்; இந்த ஆரூடத்தில் வெகு கோளாறாக பயங்கரமாகவே தெரிகிறது. முதலில் நகைகள் போனால் போகட்டும், பெண்களைக் கற்பழிக்காமலும் கொல்லாமலும் இருக்கும்படி அந்தப்பாவி எந்தத் திக்கில் இருந்தாலும் பிச்சிபிச்சி அடிக்கும்படி ஒரு மந்திரத்தை உச்சரித்து விபூதியை ஊதிவிடுகிறேன். அதற்கோர் 10ரூபாய் தான் செலவாகும். அதை இப்பவே செய்துவிட்டால் அந்தக் கிராதகனின் கைகால்கள் விழுந்துவிடும்; பிறகு மாலை பகவதி தேவியிடம் பூஜைசெய்து நேராகக்கேட்டு இடத்தைக் கண்டு பிடித்து நானே வந்து கையும் மெய்யுமாய்ப்பிடித்துவிடுகிறேன் இம்மாதிரி ப்ரத்யேக பூஜைக்குப் பால், தயிர், அபிஷேக திரவியங்கள், இன்னும் சில மந்திரம், பூஜை, ஹோமம் முதலியன செய்தால்தான் தேவி உடனே ப்ரத்யக்ஷமாவாள். அதற்கு குறைந்தது 50 ரூபாய் செலவாகும். அதைச் செய்து இன்று இரவுக்குள் உங்கள் பெண்களை உங்களிடம் சேர்த்து விடுகிறேன்; நிச்சயம்" என்று கையை நீட்டினான்.

ஒரேயடியாய் 60 ரூபாயைக் கொடுக்க மீனாக்ஷியின் மனம் துணியவில்லை. தாயியின் முகத்தை அவள் பார்க்கிறாள். தாயி எஜமானியைப் பார்க்கிறாள். "அம்மா! இந்தசமயம் யோசனை பண்ணாதிங்க. ஒரு ஆபத்தான சமயத்துலே பணத்தையா பாக்கறது? கொயந்தெ வந்து சேந்தாபோதுங்களே! ஒரு பொடவெ கட்டி கிழிச்சதாக னெனச்சுக்குங்க! எந்தப் பாவி

கிட்டெ கொயக்தெ அகப்பட்டுகிணு என்ன பாடுபடுதோ! உசிரெ உட்டுட்டா இன்ன பண்றதும்மா? சும்மா கொடுங்க!" ...என்று உபதேசித்தாள்.

மடியில் 20ரூபாய்தான் கொண்டுவந்திருந்தாள். இத்தனை பெரிய தொகை கேட்பான் என்று தெரியாது. ஆகையால், "தாயீ! கையில் 20 ரூபாய்தானே இருக்கிறது என்ன செய்வது?" என்றாள்.

இதை அறிந்த பூசாரி, "அம்மணீ! யோசிக்கவேண்டாம். அதோ விரலில் உள்ள மோதிரத்தைக் கழற்றிக் கொடுத்தால் அதைப் பணமாக்கி உடனே பூஜையைச்செய்து உத்திரவுபெற்று இன்றிரவே இடத்தைத் தேடிப்பிடித்து பெண்ணுடன் வீட்டிற்கு வந்து சேருகிறேன்" என்றான். மீனாக்ஷி மறுபேச்சின்றி மோதிரத்தைக் கொடுத்தாள். ஏதோ ஒரு எலுமிச்சம் பழத்தை மந்திரித்து சில பயங்கர சப்தங்களை உச்சரித்தவாறு விபூதியைத்தூவினான்...."ஹா! சரியான வேலை செய்துவிட்டது! அதோ!...அதோ! அந்த மனிதன் கைகள்... கால்கள் விழுந்துவிட்டன! அஹ்ஹ்ஹ!"...என்று சிரித்தான். தாயியின் சந்தோஷம் சொல்லிமுடியாது. "சாமீ! இங்கு நாங்க வந்துபோன விசயமே ஊட்டு எசமானுக்குத் தெரியக்கூடாதுங்க! எப்படியாச்சும் கொயந்தெங்க வந்துட்டா போதுங்க!" என்றாள்.

சாமியார்:—அதைப்பற்றி நீ கவலைப்படாதே, தாயி! இந்தப் பாண்டிய கஜபதி மந்திரக்காரனிடம் தோல்வி என்பதை இந்த ஜென்மத்திலே பார்க்கமுடியுமா? இன்னிக்கு ராத்திரி பாருங்களேன். அம்மாவுக்கு என்னுடைய பூஜையின் பலன் தெரியும்—என்று அட்டகாஸமாய்ச் சொன்னான்.

மீனாக்ஷி:—எப்படியாவது இன்று மாலைக்குள் என்மகள் வந்துவிட்டால்போதும். நாளைதினம் வீட்டில் பெரிய விசேஷம். அதற்குள் எங்கள் மனம் சந்தோஷப்படும்படி நீங்கள் செய்துவிட்டால் 100 ரூபாய் இனும் தருகிறேன்—என்று ஆவேசமாகக் கூறியதைக் கேட்டதுதான் தாமதம்...சாமியார் சந்தோஷத்தால் பூரித்தான்.

பிறகு இருவரும் விடைபெற்றுக்கொண்டு வந்தார்கள். நாலு வீடுகூட தாண்டவில்லை. எதிரில் வந்த காரில் வருகிறவர்கள் காரை நிறுத்திவிட்டு..."ஏது, மீனாக்ஷீ! இந்த வெய்யலில் நீங்கள் நடந்து மந்திரக்காரன் வீட்டிற்குப்போய் வருகிறீர்கள்? மந்திரம், ஜோஸியம் இதில் உங்களுக்கு நம்பிக்கையா இருக்கிறது? ஏதோ ஆயிரத்தில் ஒருவர் யதார்த்தமாகச் சொல்லலாம். இவன் வெறும் மோசக்காரனல்லவா? பலபேரை ஏமாற்றிப் பிழைக்கும் ஹம்பக்குப் பேர்வழியிடமா வந்து ஜோஸியம் கேட்கவேணும்? இந்த அயோக்யனைப்பற்றி உங்களுக்குத் தெரியாதா? இவனைப் போலீஸார் கைதுசெய்ய சரி

யானபடி சமயத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த அல்பனிடம் எதற்காக வந்தீர்கள்?...யார் அழைத்து வந்தார்கள்?'' என்று கேட்டபோது மீனாக்ஷியின் மண்டையில் இடி இடித்தது போலான அதிர்ச்சி உண்டாகித் தலை சுற்றியடித்தது.

15

உண்மையில் லக்ஷ்மியின் உள்ளந்தான் அதிகமாக வருந்தித் துடிக்கின்றது. இவர்கள் இருக்கும் நிலைமை யாருக்கும் தெரியாதல்லவா! முதல்முதல் வீட்டிற்கு மருமகள் வந்தவேளை ஏதோ அனர்த்தம் விளைந்துவிட்டது என்று எங்கே தன்னைச் சொல்லிவிடுவார்களோ?... அடாப்பழியும் படாப்பழியும்வந்து சூழ்ந்து விடுமோ?...என்கிற பயம் பூர்ணமாகப் பிடித்துக்கொண்டு உலுக்குகிறது. முகத்தின் தேஜஸை மறைந்து தவிப்பதைக் கண்ட சேகரனுக்கும் தாங்கமுடியாத கலக்கம் உண்டாகிவிட்டது. வீட்டில் விருந்திற்காக வந்திருக்கும் சிலருக்குக்கூட இந்த பயங்கரமான விஷயம் தெரியாமல் சாமர்த்தியமாய் நடந்துகொள்ள வேண்டுமே; என்ன செய்வது? நாய் கடித்து விட்டது என்பதற்கு பயப்படவில்லை. எத்தனையோ வீடுகளில் நாய் இருக்கிறது. கடித்துவிடுவது சகஜம். பெண்களையே காணவில்லை என்றால் எப்படி இதற்குச் சமாதானம் கூறுவது?''.... என்று மனது வெதும்பும் சமயம் டெலிபோன் மணியடித்தது. சேகர் ஓடிப்போய் ரிஸீவ் செய்தான். "ஹல்லோ! மிஸ்டர் சேகரா?'' என்ற குரலைக் கேட்டவுடனேயே தூக்கிவாரிப்போட்டு ஒருவித பயமும் நடுக்கலும் உண்டாகி மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. நடுங்கும் குரலுடன் "நான்தான் சேகர்'' என்றான்.

பக்கத்தில் நிற்கும் லக்ஷ்மிக்கு சேகரனுடைய நடுக்கலைக் கண்டு மனது திடுக்கிட்டதால் இன்னும் சமீபத்தில் நின்று பேசும் குரலையும் வெகு கூர்மையாகக் கவனித்தாள். பெண்கள் வந்து விட்டார்களா?...என்று கேட்டறியவே எஜமானர் கூப்பிடுகிறார்: என்ன பதில் சொல்வது?...என்று சேகரனின் உடல் வியர்த்துப் போயிற்று. லக்ஷ்மிக்கு பயம் தாங்காமல், "யாரு? என்ன விஷயம்? ஏன் இப்படி உடல் வியர்த்து வியர்த்துப் பதறுகிறது!'' என்று ஜாடையாலும் மெல்லிய குரலாலும் கேட்டாள். "என் ஆபீஸ் எஜமானர் கூப்பிடுகிறார்'' என்பதைமட்டும் சொன்னான். "ஹல்லோ!... மிஸ்டர் சேகர்! ஏன் உங்கள் குரல் நடுங்குகிறது? சகோதரி வந்து விட்டாளா?'' என்று, எதைப்பற்றி சேகர் நடுங்கினானோ அதைப்பற்றியே கேட்டபோது மறுபடியும் சேகரனின் இதயத்தில் செம்மட்டியாலடிப்பது போன்ற அதிர்ச்சி

உண்டாகியது. மெல்ல சமாளித்துக்கொண்டு "ஸார்!...இன்...னும்...வர...வில்லை...அந்த ஸினிமாராணியின்...வீட்டிற்குப் போய்ப் பார்த்தேன்...என்று மேலே சொல்ல முடியாது தவித்தான்..."ஸார்! பயப்படாமல் சொல்லுங்கள். விஷயம் என்ன ஆயிற்று?" என்று பரபரப்புடன் கேட்டார்.

சேகர்:—ஸார்! எனக்குப் பேசவே முடியவில்லை. எங்கள் கண்ணியமான குடும்பத்திற்கே ஏதோ ஆபத்து வந்து விட்டதுபோல் மனது வெடித்துவிடும் நிலைமையிலிருக்கிறது. அங்குப்போய்ப் பார்த்தேன். ஏதோ பெரிய மோசடி நடந்து விட்டிருக்கிறது, ஸார்! எங்கள் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொண்டு அந்தப் பெண்களை யாரோ அழைத்துக் கொண்டு போய்விட்டார்களாம். எங்கள் நிலைமை படுமோசமாயிருக்கிறது. கண்ணியமான மனிதர்களெல்லாம் விருந்துக்காக வந்திருக்கிறார்கள். அவர்கள் முன்னிலையில் இந்த அவமானத்தை எப்படிச் சகிப்பது? விருந்தையே ஏதாவது சாக்கு வைத்து நிறுத்திவிட நினைக்கிறேன்.

எஜமா:—மிஸ்டர் சேகர்! அவஸரப்பட்டு அப்படி எல்லாம் செய்துவிடாதீர்கள்! அதுதான் விகாரமாகி விடும். பூர்வ ஜென்மத்தில் விட்டகுறை, தொட்டகுறை என்றும் ஜென்மாந்திர வாஸனை — ஜென்மாந்திர பந்துத்வம் என்றும் சொல்வார்களே; அது மிகவும் சரியாக இருக்கிறது.

சேகர்:—ஸார்! புதிர்போல் பேசுவது எனக்கு விளங்கவே இல்லையே!

எஜமா:—அவஸரப்படவேண்டாம், மிஸ்டர் சேகர்! புதிர் போன்ற விஷயத்தை விளக்கிவைக்கவே பேசுகிறேன். நான் யாரோ! நீர் யாரோ! எதனாலோ ஒருவித பற்றுதல் உம்மிடம் எனக்கிருப்பதனால்தான் நானே வலிய உம்மிடம் எனது அந்தரங்க விஷயங்களைக் கூறினேன். நீர் போனபிறகு எனக்கு எதனாலோ மனது கொஞ்சங்கூடசமாதானமாகாமல் ஏதோ ஒரு விதமாய்த் தவித்துக்கொண்டிருந்தது. யோசித்து ஒரு முடிவுக்குவருவதற்குள் நான் அவஸரமாய் ஆபீஸ் வேலை நிமித்தம் வெளியே போகும்படி ஏற்பட்டது. நான் போகும்போது உமது சகோதரியும் கூடவந்த பெண்ணும் காரில் அந்த மூதேவியுடன் செல்வதைப் பார்த்து எனக்கே இதயம் வெடித்துவிடும்போலாவிட்டது. கூடிய சீக்கிரத்தில் என் ஸ்தானத்திற்கே வரக்கூடிய யோக்யதையுள்ள உமக்கு —உயர்ந்த கண்ணியம் வாய்ந்த குடும்பத்தில் சம்பந்தம் செய்துள்ள உமக்கு—உத்தமமான மனைவியை அடைந்துள்ள உமக்கு—நாளையதினம் விருந்து நடத்திப் பெருமையடையப் போகும் உமக்கு—இந்த செய்கையினால் மகத்தான பங்கம் நேர்ந்துவிடுமே என்கிற ஒரு கவலை எதனாலோ என்னை வாட்டியது...

உடனே நான் போன காரியத்தை முடித்துக்கொண்டு என் ப்ரைவேட்டு ஸெக்ரடரியை டாக்ஸிகாரில் அனுப்பி சொந்தக்காரர் கூப்பிடுவதாகவும் சேகர் என்னை அனுப்பிய தாகவும் சொல்லி அவர்களை என் வீட்டிற்கு அழைத்துவரும் படிக்கு நானே பெரியதனம் செய்துவிட்டேன். தற்போது உங்கள் சகோதரி தாமரைப்புரத்திலுள்ள என் வீட்டிலிருக் கிருள். நான் என் வீட்டிலிருந்து தான் பேசுகிறேன்...

என்பதைக் கேட்டதுதான் தாமதம்...சேகரனின் மனம் அடைந்த சந்தோஷமும் ஆனந்தத்தால் பூரித்துப் புலகித மடைந்தவிட்ட பெருமிதமும் கூறவேமுடியாது. தொண்டை யடைக்கக் கண்கள் ஆனந்த பாஷ்பத்தைக் கக்க...''ஸார்! ஸார்!... தற்போது எங்கள் குலதெய்வம் நீங்கள்தான் ஸார்! எனக்குப் பேசவே தெரியவில்லை. சின்னபின்னமாய்ச் சிதறிப் போகவிருந்த எங்கள் குடும்பத்தின் மானத்தைக் காப்பாற் றிய மகான் நீங்கள்தான். இந்த அபாரமான உபகாரத்திற்கு நான் எப்படித்தான் வந்தனத்தைத் தெரிவிப்பேன்'' என்று பொரிந்து தள்ளினன்.

கணவனின் உணர்ச்சியையும் இந்த அதி சந்தோஷகர மான விஷயத்தையும் கேட்ட லக்ஷ்மிக்கு உடலும் உள்ளமும் பூரித்துத் துள்ளச்செய்தது.

''ஸ்வாமீ! பகவான் இந்த மகான்மூலம் நமது குடும்ப கண்ணியத்தைக் காப்பாற்றச் செய்ததற்காக வந்தனத்தைக் கூறி இப்போதே வந்து அழைத்துப்போவதா? என்று கேளுங்கள்'' என்று கூறினள்.

சேகர் பெருமிதத்துடன் பேசத்துடங்கி, ''ஸார்! இப் போதே நான் வந்து அழைத்துப்போகிறேன். இந்தச் சிறிது நேரத்திற்குள் நாங்கள்பட்ட அவஸ்தையைச் சொல்லி முடி யாது. என் மனைவி தங்களுக்கு ப்ரத்யேக வந்தனத்தைச் செலுத்துகிருள். நான் நேரில்வந்து பேசுகிறேன்'' என்ருன்.

எஜமானர்:—மிஸ்டர் சேகர்! நீங்களெல்லோரும் எப்ப டித்தான் துடித்திருப்பீர்கள் என்று எனக்கு மிகவும் நன்ரு கத் தெரியும். அந்த நரகவேதனையை நான் அனுபவித்துப் பொட்டைபரத்திருப்பவனுதலால் அதைப்பற்றி விவரிக்கவே வேண்டாம்...உடனே வாருங்கள். மிஸ்டர் சேகர்! ஒரே ஒரு வேண்டுகோள். அதைமட்டும் நிறைவேற்றவேண்டும்.

சேகர்:—இதென்ன ஸார்,இப்படிக் கேட்கிறீர்கள்? நீங்கள் எஜமானர்! நான் உங்கள் குமாஸ்தா! எந்தக் காரியத்தைச் சொன்னுலும் செய்துமுடிக்கக் காத்திருக்கிறேன்...

எஜமா:—மிஸ்டர் சேகர்! தாங்கள் வரும்போது தங்கள் தர்மபத்னியையும் அழைத்துவந்து எங்கள் வீட்டில் ஒரு தாம்பூலம் பெற்றுச் சென்ருல் போதும் அவ்வளவுதான்,

சேகர்:—அடாடா! இதையா ஒரு பெரிய பீடிகையுடன் கேட்கவேண்டும்? தாங்கள் செய்துள்ள இந்த மகத்தான உதவிக்கு அவளே நேரில்வந்து நமஸ்கரிக்க விரும்புவதால் நானே அழைத்துவருவதாக இருந்தேன். இதோ இருவரும்...ஏன்... என் பெற்றோர்களையுங்கூட அழைத்துவருகிறேன்.வரட்டுமா?—என்று பேசி ரிஸீவரை வைத்தான்.

மீனாக்ஷியம்மாளைக் காருடன் வந்து கலக்கிவிட்ட மனுஷி இவர்களுடைய சினேகிதர்கள் ஆதலால் இடிந்துபோய் நின்றுவிட்டதைக் கண்டு காரிலேயே கொண்டுவிடுவதாகக் கூப்பிட்டார்கள். மீனாக்ஷியம்மாள் தனக்காக ஜோஸியனிடம் வந்த உண்மையைச் சொல்லாமல் ஒளித்து, "இந்த வேலைக்காரியின் மகளுக்குக் கல்யாணம். ஜாதகம் பார்க்க வேண்டி என்னை அழைத்தாள். அதனால் வந்தேன். போய்வருகிறேன்" என்று வழவழ, கொழகொழ வென்று பதில் சொல்லிக்கொண்டே உடைந்த மனத்துடன் வீட்டிற்கு ஓடிவந்து இரண்டாம் பேருக்குத் தெரியாமல் தன்னறையில் வந்து படுத்த பிறகு, "தாயே! இதென்ன அநியாயமடா! ஏதோ ப்ரமாதமாய்ச் சொல்லிஇழுத்துக்கொண்டுபோய் ஒருசவரன் மோதிரத்தைத் தாரைவார்த்துவிடச் செய்துவிட்டாயே;இந்த அயோக்யனை ஏன உனக்குத் தெரியவில்லை. சகலமும் பாழாகி விட்டதே! என்ன செய்வேன்! குழந்தையின் தகவலே தெரியவில்லையே. உன்னாலாகிய லாபம இது வேறயா!" என்று கண்ணீர் வடிக்கும்போது லக்ஷ்மி பரபரப்புடன் ஓடிவந்து, "அம்மா அம்மா! கண்ணீர் விடவேண்டாம். வனஜா சவுக்யமாயிருக்கிறாராம். உங்கள் பிள்ளை கூப்பிடுகிறார், வாருங்களேன" என்று குதூகலத்துடன் கூறியதைககேட்டு மீனாக்ஷியின் துயரமெல்லாம் பறந்துபோய் இன்பக்கேணியாய் நிறைந்துவிட்ட சந்தோஷத்தில் ஓடிவந்தாள்.

இதற்குள் சேகரன் தாய்தந்தையிடம் சகல வரலாற்றையும் கூறினான்.

உண்மையில் பிறர் நகைகள்,தங்கசாமான்கள்முதலியவைகளுடன் ஊரார் வீட்டுப் பெண்ணும்கூடப் போயிருப்பதால் மிகமிக விசனித்துக்கொண்டு மூர்ச்சையே போட்டுவிட்டதுபோல் கிடந்த மீனாக்ஷிக்கு இந்த விஷயத்தைக் கேட்டதும் போன உயிர் திரும்பிவந்ததுபோன்ற ஒரு அபார சந்தோஷம் உண்டாகியது.தன மகனுடைய கண்ணியததையும் உத்யோக மதிப்பையும அப்போதுதான நன்குஉணர்ந்துகொண்டாள். அதோடு நாட்டுப்பெணணின அதிர்ஷ்டத்தையும் தனக்குள் வியந்து பாராட்டினாள். ஜோஸியனின புரட்டும மோசமும் உள்ளுக்குள் புலனாகிக் குதித்தது. ஒரு சவரன் மோதிரம் போயவிட்ட விசனமும் மறைந்தது!

மனைவி செய்துள்ள முட்டாள் தனத்தின் விபரீதத்தினல் கோபம்கொண்டு மனைவியைப் பார்த்த சேகரனின் பிதா, "மீனுக்ஷி! இனிமேலாவது உனக்கு புத்தி வருமா? சினிமா மோகத்தின் விபரீதம் உன்னை மட்டுமன்றி உன் பெண்ணையும் இத்தனை தூரம் ஆட்டிவைத்துவிட்ட பரிபவம் போதுமா? அதோடா நின்றது உன் செய்கை? இரவல் நகைகளும்இரவல் தங்கசாமான்களும் நீ வாங்கிக் கொடுத்த பயங்காம் உன்னைப் பாழாக்கிவிட்டதேயன்றி நீ எதிர்பார்த்தபடி பெருமையையா கொடுத்தது? இரவல் வாங்கியாவது வீண் ஜம்பத்திற்கும் பெருமைக்கும் பாடுபடும் கெட்ட பழக்கத்தை இனி கனவில் கூட நினைக்காதே உம்!......புறப்படு! உன்னுடைய இந்த ஷோக்கு சிங்காரமும் பன்னுடைப் புடவையும்வேண்டாம். நல்ல கொரநாட்டுப் புடவையைக் கட்டிக்கொண்டு தலையை அழகாக முடிச்சுப் போட்டுப் புஷ்பம் சூட்டிக்கொண்டு முகத்தில் பளிச் சென்று குங்குமப் பொட்டு இட்டுக்கொண்டு மூக்குத்தியை எடுத்துப் போட்டுக்கொண்டு வா! அதோடு காதில மீனும் நண்டும் தப்பளையும் தேளும் பாம்புமாக உள்ள நாகரிக ஆபரணங்களைக் கழற்றிவிட்டுப் பெரிய வைரக்கம்மலை அணிந்துகொண்டு அடக்கஒடுக்கமான கண்ணியம் வாய்ந்த குடும்ப ஸ்த்ரீகளைப்போல வா! உனக்கான வயதென்ன? நீ செய்துகொள்ளும் அலங்காரமென்ன? வெட்கக்கேடு! அந்த உத்தமர் உன்னைப் பார்த்தால் நீதான் சினிமாக்காரி என்று எண்ணிவிடுவார். உன் காட்டுப் பெண்ணைப் பார்த்தாலாவது உனக்குப் புத்திவரும் என்று எண்ணினேன்; இனிமேலாவது புத்திவரட்டும்" என்று தன்னுள்ளத்தில் குமுறிக்கொண்டிருந்த ஆத்திரத்தைத் திட்டிவிட்டுக் கிளம்பினர்.

லக்ஷ்மி மிக்க மரியாதையுடன், "அம்மா! சில முக்யஸ்தர்களை நேராக நீங்களே அழைக்கவேண்டும்; அதனல் போய் வருகிறேன் என்றும், எனக்கு ஏதோ புடவை வாங்கவேண்டும் அதனல் என்னையும் அழைத்துப் போவதாயும் சொல்லிவிட்டு வாருங்கள்" என்று யுக்தி சொல்லிக்கொடுத்தாள். இதைக் கேட்ட மாமனர் வெகுவாய்ச் சந்தோஷப்பட்டார். பிறகு மீனுக்ஷி கணவன் சொல்லியபடியே அலங்காரத்துடன் வந்தாள். எல்லோரும் கிளம்பிச் சென்றார்கள். தன்மீது தன் எஜமானர் வைத்துள்ள அன்பையும் மதிப்பையும் கண்டு சேகரனின் உள்ளம் ஆனந்தத்தினல் பூரித்து விம்மியது.

16

வனஜாவும் கிரிஜாவும் சாய்க்கடியின் பாதையைக்கூட லக்ஷயம் செய்யாமல் சினிமா ராணியின் பக்கத்தில் அட்டகாஸமாய் ஆனந்தமாய் இன்பக்கடலில் மூழ்கி ஈடிலாப் பெருமையுடன் உள்ளம் குளிர ஊக்குருவிபோல் பறக்கும் பெருமை

யில் தங்களையே மறந்துவிட்டார்கள் என்றால் மிகையே ஆகாது. தாங்கள் பிறந்த பயனை இப்போதுதான் பூராவாக அனுபவிப்பது போன்ற ஒரு புத்துணர்ச்சியுடன் ஒருவர் முகத்தை யொருவர் பார்ப்பதும் பூரித்துச் சிரிப்பதுமாக இருக்கிறார்கள்.

வண்டியை ஓட்டும் நக்ஷத்திரம் 50 மைல் வேகத்தில் அலக்ஷியமாக விடும் அழகைக்கண்டு பின் ஸீட்டில் உட்கார்ந்துள்ள மனிதன், "பலே பேஷ்! உத்திராதேவி! என்ன ஷோக்காகக் கார் விடுகிறீர்கள்? கார் விடுவதற்கு ஒரு போட்டிப் பந்தயத்தை வைத்தால் கட்டாயம் நீங்கள்தான் ஜெயிப்பீர்கள்! என்ன வாட்டசாட்டமாய்க் கைகள் வேலைசெய்கின்றன! இந்த இரண்டு குட்டிகளும்கூட உங்களிடம் பழகிவிட்டால் இப்படியே 'தர்பீத்து' செய்துவிடுவீர்களல்லவா? இவர்களுடைய சாமர்த்தியத்தை இப்போது பார்த்தாலே தெரிகிறது" என்று ஆர்ப்பரித்தான்.

எதற்கும் அதிகம் பதில் சொல்லிப் பேச்சை வளர்த்தாமல் உத்திரா காரை ஓட்டிச்சென்று டாக்டர் வீட்டையடைந்தாள். கூடவந்தவன் இந்தப் பெண்களை அழைத்துச் சென்று டாக்டரிடம் ஏதேதோ பேசினான். டாக்டர் பார்த்த பிறகு, "இவர்கள் ஆஸ்பத்திரியிலேயே இருந்து ஊசிபோட்டுக் கொள்ளவேண்டும். இப்போதே இங்குத் தங்குகிறீர்களா!" என்று கேட்டபோது, பெண்களைத் தூக்கிவாரிப்போட்டது. "நாங்கள் வீட்டிற்குப் போய்ப் பிறகு வருகிறோம்" என்று மறுத்துவிட்டார்கள். சினிமா ராணி உத்திராதேவியின் நடிப்பு, பாட்டு முதலியவைகளைப்பற்றி ப்ரமாதமாய்ப் புகழ்ந்து டாக்டர் பேசுவதைக் கேட்பதே இந்த இரண்டு பெண்களுக்கும் நோய்க்கு மருந்து கொடுப்பதற்கு மேலான சந்தோஷமும் உத்ஸாகமும் உண்டாக்கியது.

தற்கால சாந்தியாய் ஊசிகுத்தி மருந்து கொடுத்தனுப்பினதும் உத்திராவே வீட்டிற்கு அழைத்துவந்துவிட்டாள். "உங்கள் வீடு எங்கிருக்கிறது? சொல்லம்மா! நான் என் காரில் அனுப்புகிறேன். வாசலில் உங்கள் வண்டியைக் காணவில்லை" என்று உத்திரா சொல்லியபோது இந்தப் பெண்களுக்குச் சற்றுத்திடுக்கிட்டது...வண்டியைக் காணவில்லையா?... என்று கேட்டுக்கொள்வதுபோல் குறிப்பாக ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

அதேசமயம் ஷூட்டிங்கிற்கு வரும்படிக் கார் வந்துவிட்டதால் உத்திராதேவி அதற்குத் தயாரானாள். அதேசமயம் மற்றொரு பெரியமனிதர் வந்து வெகு மரியாதையுடன் வனஜாவையே பார்த்து "உங்க அண்ணா உங்களை அழைத்துக் கொண்டு வரச்சொன்னார்" என்று அழைத்தார். வந்த மனிதர் முன்பின் தெரியாதவராக இருப்பினும் தனது அண்ணன்

ஆபீஸிலிருப்பதாயும் இவர்களுக்காகக் காத்திருப்பதாயும் சொல்லியதால் தைரியமுண்டாகியது அண்ணனைப்பற்றிக் கேட்ட தகவல்களுக்குச் சரியாய்ப் பதில் சொல்லியதால் ...உண்மையாகத்தான் அவர் அனுப்பிய ஆளாக இருக்கவேண்டும். அதோடு வாசலில் கார் இல்லாததால் ட்ரைவர் வீட்டிற்குப்போய் நாம் இங்கிருக்கும் தகவலைத் தெரிவித்திருக்கலாம். அதனுல்தான் அண்ணு நேரில் வராமல் கோபித்துக்கொண்டு யாரையோ அனுப்பி இருக்கிருர். இங்கு உத்திராதேவியும் போய்விட்டால் நாம் தனியாக இருக்கும்படி நேரும். இங்கிருக்கும் மனிதனைப் பார்த்தால் ஏதோமாதிரி இருக்கிறது. ஆகையால் நாம் இப்போது வந்திருப்பவருடன் போய்விடலாம்...என்று இருபெண்களும் பேசிக்கொண்டு உத்திராதேவியிடம் விடைபெற்றுக் கிளம்பினுர்கள்.

இதுவரையில் தம்மையே மறந்துபோய் நித்யானந்த நிலைமையில் திளைந்துகொண்டிருந்தவர்களுக்குத் தமது வீட்டு நினைப்பை உண்டாக்கிவிட்டதால் திடீரென்று ஒரு பயம் தோன்றித் திடுக்கிடச் செய்தது. ஏற்கெனவே புறப்படும்போது தன் பிதா எச்சரித்தது குபீரென்று நினைவுக்கு வந்ததும் ஒரு உலுக்கு மனத்தை உலுக்கியது. காலை 7 மணிக்குக் கிளம்பியவர்கள் ஒரு வீடுகளிலும் அழைக்காமல் நாய்க்கடியையும்கூட சம்பாதித்துக்கொண்டு இத்தனைநேரம் கழித்துச் சென்ருல் என்ன நினைப்பார்களோ? என்ன திட்டுவார்களோ?...என்கிற திகில் வேறு வாட்டுவதால் முதலில் வீட்டிற்குப் போய்விட்டால் போதும்போல் தோன்றியது. ஆகையால் தாமாகவே கிளம்பி வந்தார்கள். இதுவரையில் சிறிது தெரியாதிருந்த நாய்க்கடியின் நோவு இப்போதுதான் அதிகமாய்த் தெரியவாரம்பித்தது. வீட்டிற்குப் போனுல் என்ன விதமான மரியாதை கிடைக்குமோ!......என்கிற பயத்துடன் காரில் உட்கார்ந்தபோதுதான் கையில் கொண்டுவந்த தங்கக் குங்குமச் சிமிழ், சந்தனக் கிண்ணம் முதலியவைகளின் நினைவு வந்தது. உடனே ஒரு துள்ளு துள்ளியவாறு ......கிரிஜா! தங்கச் சிமிழ், கிண்ணம் இரண்டும் எங்கே வைத்தோம்...என்று நாக்கைக் கடித்தாள்.

நாய் கடித்து அலங்கோலமாக விருந்த சமயம்...எது எங்குச் சிதறியது? எப்படிப் போயிற்று?...என்பதையே அடியோடு இதுவரையில் மறந்திருந்தவர்களுக்குச் சுரீரென்று தேள் கொட்டியதுபோல் நினைவு வந்து மறுபடி இறங்கி உள்ளே ஓடினுர்கள்.

உத்திராதேவி தடபுடல் சினிமா அலங்காரத்துடன் காரில் செல்ல ஆயத்தமான சமயம் இந்த இரண்டு அப்பாவிகளும் திருகத்திருக விழித்தபடியே எதிரில் வந்து நிற்பதைக் கண்ட அவளுக்குச் சிரிப்பே வந்துவிட்டது...சினிமா நக்ஷத்

திரத்தின்மீது தம்மையே மறந்த மோகம் இத்தகைய சின்னஞ்சிறு பெண்களுக்கே இருக்கிறது என்றால் மற்றப்படி கேட்கவேண்டுமா?......என்று நினைத்தபோது எதனாலோ சிரிப்பு வந்துவிட்டது......மெல்ல சமாளித்துக்கொண்டு, "என்ன விஷயம்? என்னைக் கட்டாயம் வரும்படிக் கூப்பிடவா மீண்டும் வந்தீர்கள்? இதோ பாருங்கள்! நாங்கள் உங்களைப் போன்று சாமான்யப் பேர்வழிகளல்ல. வீட்டைவிட்டு வாசல் பக்கம் வந்தாலே எங்கள் தரிசனத்திற்காக நூத்துக் கணக்கான ஜனங்கள்; ஏன் பெரியபெரிய பணக்காரர்கூட காத்துக் கிடக்கிற வைபவத்தை நீங்கள் அறியமாட்டீர்கள். நாங்கள் ஏதாவது சாமான்கள் வாங்கக் கடைக்குப் போனால் தெருவில் வண்டி போக்குவரத்துக்கூட நின்றுவிடும்படிக் கூட்டம் நிரம்பி விடுகிறது. சிலசமயம் போலீஸார்கூட வந்து விலக்கவேண்டியிருக்கிறது. அப்படிக்கிருக்க சாதாரண மனிதர்கள் வீட்டுக் கல்யாணத்திற்கு நாங்கள் வந்தால் வீண் கலாட்டாதான் நடக்கும்...தெரிந்ததா? நாங்களெல்லாம் நினைத்தபடி நினைத்த இடத்திற்குப் போகமுடியாது. எங்களைப் போன்றவர்களின் பெருமை உனக்குத் தெரியாததால் சாதாரண ஒரு மனிதனை அழைப்பதுபோல அழைத்துவிட்டால் நாங்கள் வந்துவிட முடியாது. ஏதோ மரியாதைக்குக் கூப்பிட்டதும் வருகிறேன் என்று சொல்வதோடு நிறுத்திக்கொள்ளவேணும்; போய் வாருங்கள்." என்று தடதடவென்று பேசியபேச்சு இவர்களை முற்றிலும் ஏமாற்றமடையச் செய்ததோடு ஏதோ எதிர்பார்த்த சொர்க்கம் கை நழுவிப்போய்விட்டதாகவும், பெரும் நஷ்டம் உண்டாகியதாயும் ஒரு மகத்தான அதிர்ச்சி உண்டாகித் தலைசுழலவாரம்பித்தது மெல்ல சமாளித்துக்கொண்டு, "அம்மணீ! அதுமட்டுமில்லை; நாங்கள் கையில் கொண்டுவந்த தங்கச் சிமிழும் கிண்ணமும் காணவில்லை...அதை...என்பதற்குள், பின்னும் கடகடவென்று நகைத்துக்கொண்டே; "ஓகோ! தங்கச்சிமிழ் கொண்டுவந்தீர்களா? அதை யார் கண்டது? நீங்கள் கொண்டுவந்த சாமான் அதோ கிடக்கிறது. அதுவும் மூலைக்கொன்றாகச் சிதறிக்கிடந்ததைப் பொருக்கிவைத்து வேலைக்காரி எடுத்து வந்தாள்" என்று கூறியவாறு அலக்ஷியமாய் அவைகளை வீசி எறிவதுபோல் கொண்டுவந்து வைத்தாள்.

அது சாதாரணத் தட்டில் தாங்கள் கொண்டுவந்த சாமான்கள்தான் என்பதையும் இவைகளை இத்தனை அலக்ஷியமாக வீசி எறிவதுபோல் போட்டதையும் கண்டு ஒருபுறம் மனத்தில் ஏதோபோல் சங்கடம் உண்டாகியதுடன் தன் தாயார் ஜம்பத்திற்காக இரவல் வாங்கிவந்த தங்கச்சாமான்கள் காணாத அதிர்ச்சியினால் உடம்பே ஆட்டங்கண்டுவிட்டது. கிரிஜாவே சற்று தைரியத்தை வரவழைத்துக்கொண்டு, "அம்மணீ!

தங்கச் சாமான்களை யாராவது எடுத்துவைத்தார்களா? கேளுங்கள்! வீட்டில் எங்களைக் கோபிப்பார்கள்...என்று முடிப்பதற்குள், உத்திரா மிக்க கோபத்தையடைந்து, "சீச்சீ! அல்பங்களா! என் வீட்டுச் சாக்கடையில் சிக்கிப்போவது காணுது. அப்படிப்பட்ட வீட்டில் உன்னுடைய அல்பசாமான் களைத் திருடிவிட்டதாகவா பேசுகிருய்? சீச்சீ! வெளியே போய்விடுங்கள்!...உம்!...மரியாதையாய் வெளியே போய் விடுங்கள்" என்று கழுத்தைப்பிடித்துத் தள்ளாத குற்ற மாய்ப் பேசிய அக்ரமத்தைக்கண்டு இருவருக்கும் கதிகலங்கி விட்டது. செய்வதறியாது கண்ணில் நீர் முட்டத் தடதட வென்று திரும்பிவந்து காரில் ஏறிக்கொண்டார்கள்.

உள்ளத்தில் பயம் உறுமுகிறது. வீட்டில்போன உட னேயே என்னகதி நேருமோ? ஊரார்வீட்டுச் சாமான்களைத் துலைத்துவிட்டதால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு என்ன தண்டனை கிடைக்குமோ!" என்கிற அபாரமான திகிலுடன் வரும்போது கார் ஒரு பங்களாவின் போர்ட்டிகோவில் நின்றபிறகுதான் சுயஉணர்ச்சியுடன் எட்டிப்பார்த்தார்கள்.

"தங்கள் வீடு இது இல்லையே! எங்கேயோ அழைத்துவந் திருக்கிருர்களே...ஐயையோ!...இதுவும் மோசமாக இருக் குமா" என்ற பயத்துடன் விழிக்கையில் இவர்களை அழைத்து வந்தவர், "அம்மணி! இறங்குங்கள்! உள்ளே உங்கள் தமயனர் இருக்கிருர். இங்குதான் அழைத்துவரச் சொன்னுர்" என்று வணக்கமாயும் கண்ணியமாயும் சொன்னதைக்கேட்டு இறங் கினுர்கள்.

பயந்து நடுங்கியபடியே உள்ளே சென்றுர்கள். முன்பக் கத்து ஹாவில் ப்ரம்மாண்டமான ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திவ்ய தேஜஸ்ஸுடன் கூடிய சலவைக்கல் சிலையும் பின்னுல் பசுவும் கன்றுக்குட்டியும் பார்ப்பதற்கு அதிமனேகரமாய் ப்ரமிக்கும் படியாயிருக்கும் காட்சி இந்தச் சின்னஞ் சிறுமிகளின் உள்ளங் களைக் கவர்ந்தது.

புல்லாங்குழல் ஊதும் க்ருஷ்ணனின் முகத்தின் புன் முறுவலும் வாஸனையை அள்ளிவீசும் ரோஜா பன்னீர் மாலை களின் வசீகரமும் ஊதுவத்தியின் பரிமளமும் க்ருஷ்ணன் சிலையைச் சுற்றி அழகிய புஷ்பச் செடிகளின் சிங்காரமும் இரண்டு பெரிய குத்துவிளக்குகள் அலங்காரமாய்—மங்கள கரமாய்—ப்ரகாசிக்கும் அழகும் காண இவர்களை யறியாத ஒரு தனி உணர்ச்சி உண்டாகியதால் கட்டுண்டநாகம்போல் சில விநாடிகள் இதையே பார்த்துக்கொண்டு நின்றுர்கள்.

அதேசமயம்; "அம்மணி! இதோ இந்த அறையில் வந்து உட்காருங்கள்" என்று கூப்பிட்ட பொழுதுதான் தன் நினைவு பெற்றுத் திரும்பினுர்கள். சேகரன் எங்கே என்கிற நினைவும் உண்டாகியது. இரண்டு தட்டுகளில் டிபனும் காப்பியும் ஒரு

சமயல்காரன் மேஜைமீது கொண்டுவைத்துவிட்டு அசடு வழிய நின்றதைக் கண்டதும் இவர்களுக்கு மகத்தான சந்தேகம் வந்துவிட்டது. "இதுவும் ஏதோ சூழ்ச்சியான இடந்தான் போலிருக்கிறதே! என்ன செய்வது? அண்ணா இங்கிருப்பதாகப் பொய் சொல்லிவிட்டு எவனோ அழைத்து வந்து விட்டானே!"......என்ற கலக்கம் உண்டாகி நடுங்கச் செய்தது.

அதேசமயம் டெலிபோன் மணியடித்ததும் இவர்களை அழைத்துவந்த மனிதன் ஓடிச்சென்று பேசலானான். இவன் பேசுவது ஒன்றுதான் இந்த பெண்களின் காதுகளில் கேட்கிறதேயன்றி எதிராளி பேசுவது தெரியவில்லை. இவன் பேசுவதில்... அதுவா... ஆமாம்; இரண்டும் கிட்டிவிட்டது... புக்செய்ய வேண்டியதுதான்... அதைப்பற்றி என்ன...ரொம்ப உயர்ந்த ரகமாகவே இருக்கிறது.........ஆயிரத்து ஐந்நூறு கொடுக்கலாம் என்று நினைக்கிறேன்......

இதற்குமேல் இந்தப் பெண்களால் இங்குக் கேட்டுக் கொண்டிருக்கப் பிடிக்கவில்லை. இவனும்யாரோசினிமாக்காரன் தான். தங்களைத்தான் புக் செய்வதுபற்றிப் பேசுகிறான். ஆயிரத்து ஐந்நூறு நமக்குத்தான் கொடுப்பதாக ஏதோ நடக்கிறது. நமக்கு ஏதோபோதாதகாலந்தான் இப்படியாகி விட்டது. எப்படியாவது இந்த இடத்தைவிட்டு இப்போதே எங்காவது வெளியே சென்று நேரே டாக்ஸி வைத்துக் கொண்டு வீட்டிற்குப் போய்விடவேணும் என்று இருபெண்களும் முடிவுசெய்துகொண்டார்கள்.

சாப்பிட்டுக் கையலம்பும் சாக்கை வைத்துக்கொண்டு தோட்டத்துப் பக்கம் சென்றார்கள். வீட்டில் தங்களைத்தவிர வேறு பெண்மணிகளே இல்லாதது மிக்க பயத்தையே உண்டாக்கிவிட்டது. புழக்கடைப் பக்கம் உள்ள கதவைத் திறந்துகொண்டு நடக்கமாட்டாது தவித்தவாறு இருவரும் வெளியே போய்விட்டார்கள். இவர்கள் இருந்த விடுதியைச் சாத்திவிட்டிருந்தலால் உள்ளே இருப்பதாகவே சமயல்காரன் எண்ணி இருந்தான். டெலிபோனில் பேசிய மனிதனும் இருவரும் உள்ளே இருப்பதாகவே எண்ணி எஜமானுக்குப் போன் செய்தான். அடுத்த நிமிஷமே பாஸ்கரனும் காரில் வந்து முன்பு தெரிவித்தபடி சேகருக்குப் போன்செய்த பிறகு அந்தப் பெண்களைப் பார்த்துப் பேசும்பொருட்டுக் கதவைத் திறந்தார். உள் காலியாயிருப்பது கண்டு வீடுபூராவும் பார்த்தார். பெண்களையே காணாது திடுக்கிட்டார். "ஐயோ! எங்கே போயிருப்பார்கள்? சேகர் இப்போது வந்துவிடுவாரே! என்ன பதில் சொல்வது!" என்று பரிதாப மனத்தில் அதிர்ச்சி உண்டாகித் தாக்கியது.

183181

பக்தன்.

தெய்வீக மாதப்பத்திரிகை
நான்காம் ஆண்டு 1954
வருடச் சந்தா ரூ. 3.

கௌரவ ஆசிரியர்:
ந்யாயவேதாந்த வித்வான் உ. வே.
ஸ்ரீ காரப்பங்காடு வெங்கடாசாரியர் ஸ்வாமி,

நிர்வாக ஆசிரியரும், உரிமையாளரும்:
ஸ்ரீ எம். ஓ. அழகிய சிங்கராச்சாரி, பி.எஸ்.ஸி., பி.எல்.
காரியாலயம்—71, வெங்கடரங்கம் பிள்ளைத் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை (போன்: 86109)

சரித்திர ஜோதி
தனிப் புத்தகமாக வெளியாகிவிட்டது.
10 படங்களுடன் — அணா 12.

பாலர்
மோகினி
சிறுகதைகள்
விலை ரூ. 1.



அபூர்வராமாயணம் ஸ்ரீ ப்ர. அ. ஸ்வாமி எழுதியது
160 பக்கம் ரூ. 1—8—0

எத்தனை தரம் வாசித்தாலும் ஆராவமுதமாயிருக்கும் அபூர்வ நூல்.

தற்போது கைவசமுள்ள

வை. மு. கோ.

நாவல்கள்

K 1.	வைதேகி	ரூ. 4—8
7.	கோபாலரத்னம்	1—4
11.	வீரவஸந்தா	1—0
15.	நளினசேகரன்	1—0
25.	பக்ஷமாலிகா	0-12
35.	அனாதைப் பெண்	1-12
41.	வானக்குயில்	2—0
42.	உளுத்த இதயம்	0—8
43.	மகிழ்ச்சி உதயம்	1—4
45.	மாலதி	1—0
46.	வத்ஸகுமார்	1—0
49.	படகோட்டி	1—2
50.	ஆத்ம சக்தி	2—0
51.	உணர்ச்சி வெள்ளம்	2—8
52.	சந்தோஷமலர்	2—0
53.	கருணாலயம்	2—0
54.	புகழ்மாலை	1-12
56.	சுடர் விளக்கு	0-12
57.	கலாநிலயம்	1-12
58.	ஞான தீபம்	2—4
59.	வாத்ஸல்யம்	2—0
60.	க்ருபாமந்திர்	1—4
61.	மதுரகீதம	2—0
62.	பிரார்த்தனை	1—0
64.	மலர்ந்த இதழ்	2—8
65.	அமுத மொழி (சாதா)	2—0
	” (கிளேஸ்)	2—8
66.	பிரதிக்ஞை	1—0
67.	ஆசைப்ரவாகம்	2—0
69.	அபராதி	1—2
70.	வெளுத்த வானம்	2—0
71.	ப்ரதிபலன்	1—8
72.	பவித்திரப்பதுமை	1—8
73.	பெண் தர்மம்	1—0
74.	உண்மைச் சித்திரம்	1—0
75.	தெய்வீக ஒளி	2—0
76.	சிலாசாஸனம்	1-12
77.	புதுமைக்கோயில்	1—4
78.	மனத்தாமரை (மலிவு)	1—0
79.	தபால்விநோதம்	1—0
80.	ஓவியப்பரிசு	1—8
81.	இனிய முரசு	1—0
82.	ஆண்டவனின் அருள்	1—0
83.	இசைப்புயல்	1—8
85.	காலக்கண்ணாடி	1—8
86.	ஜெயபேரிகை	1—8
87.	ஜீவநாடி	2—0
88.	வீராங்கனை	1-12
89.	கானகலா	0—8
90.	தூய உள்ளம்	0—8
91.	ஸௌபாக்யவதி	0—8
92.	ப்ரேமாசிரமம்	0-12
93.	நியாயமழை	0--12
94.	அருணோதயம்*	0--12
95.	மனச்சாட்சி	0--12
96.	ப்ரபஞ்சலீலை	0—8
97.	வெற்றிப் பரிசு	0—8
98.	ரோஜாமலர்	0—8
99.	இந்திரமோஹனா*	1—0
100.	பாதாஞ்ஜலி	2—0
101.	அமைதியின் அஸ்திவாரம்	1-12
102.	நம்பிக்கைப் பாலம்	1—8
103.	சாந்தியின் சிகரம்	4—0
104.	கடமையின் எல்லை	1--12
105.	குலதனம்	0-12
106.	தைரிய லக்ஷ்மி	0—8
107.	சுதந்தரப் பறவை	1—8
108.	நிர்மல நீரோடை	3—0
109.	குணக் குன்று	(அச்சில்)
110.	புனித பவனம்	2—0

*நாடகம்

வை. மு. ஸ்ரீ. நூல்கள்

1.	உதய சூரியன்	1—4
3.	அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி	1—8
4.	ராணி சீலாவதி	1—0
5.	பெண்மணிக் கனல்	1—0
6.	இருளில் ஒளி	1—4
6A.	ஸ்ரீ ஸ்துதி	0—4
7.	தியாகபலி	0--12

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன்

பாலர் மோகினி

12 சிறு கதைகள் 1—0

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI-NAYAKI AMMAL is printed & published by V. M. PARTHA SARATHY at the JaganMohini Press, 26. Car St., Triplicane, Madras. 5.